1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 37-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 20-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## அம்மா! என்னை மன்னிக்க மாட்டீர்களா?

1937-ம் ஆண்டு மார்கழிமாசம் 24-ந்தேதி கொதினல்தோவின் பங்குக்குருவானவரது அறைவீட்டில் சுவாமியாரும், அசுந்தாவும் சம்பாஷித்துக்கொண்டிருக்கிறார்கள்.

"பிள்ளைகளிடமிருந்து ஏதாவதுசெய்தி கிடைத்ததா?"

"சிலதினங்களுக்குமுன் அமெரிக்காவிலிருந்து ஆஞ்செலோ அனுப்பிய ஒருகடிதம் வந்தது. அவன் தனதுதம்பியின் கல்லறையைத் தரிசிக்கச் சென்றிருந்தானம். மரியானேவும், எர்ஸிலியோவும் தங்கள்பிள்ளைகளுடன் நேற்றுஎன்னைப் பார்க்கவந்திருந்தனர். தெரேசா கன்னிகாமடத்தில் இருப்பதுதான் உங்களுக்குத் தெரியுமே...."

(யாரோ கதவைத் தட்டுஞ்சப்தம்.)

அசுந்தா எழுந்துசென்று கதவைத்திறந்தாள். அது அந்திப்பொழுது. கதவண்டை இருளாயிருந்தது. ஆயினும் அதன்வாயிலில்கையில்தொப்பியுடன் நின்றுகொண்டிருந்தவன் இன்னனென்று அசுந்தா தெரிந்துகொண்டாள்.

"அம்மா, என்னை மன்னிக்க மாட்டீர்களா?" என்றுசொல்லி அந்தமனிதன் முழந்தாளிட்டுக் கெஞ்சினன்.

அசுந்தாவின்தொண்டையில் ஏதோவந்து அடைப்பதுபோல் இருந்தது. ஆயினும்அவள் சுதாரித்துக்கொண்டு "மரியா உன்னை மன்னித்துவிட்டபோதே நான்மன்னிக்க மறுப்பேனே" என்றாள்.

கொலைப்பாதகனும் கொலையுண்டவளின் தாயும் சமரசம் பண்ணிக்கொள்ளும் இந்த உருக்கமானவேளையில் தாம் அங்கிருப்பது உசிதமல்லவென்று கருதியோ, என்னவோ, பங்குச்சுவாமியார் சற்றுப் பின்வாங்கினர். 'போகாதீர்கள்சுவாமி,நீங்களும் இருங்கள்' என்று சொன்னாள் அசுந்தா. பின்னர் அலெக்ஸான்ட்ரேவுக்கு ஒரு நாற்காலி எடுத்துப்போட்டாள். அதில்வீழ்ந்தான் அலெஸ். அவனதுநரைத்ததலை குனிந்தபடியிருந்தது. அந்த அறையோ கிறிஸ்மஸ் விழாவிற்காக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒருமூலையில் சிறியகுடில், அதில் குழந்தையேசுவின் சுரூபமும் ஏற்கனவே வைக்கப்பட்டிருந்தது.

அலெஸூம், அசுந்தாவும் மவுனத்தில்ஆழ்ந்திருந்தனர். கடைசியில் பங்குச்சுவாமியாரே பேச ஆரம்பித்தனர். அலெஸ் தங்களுடன் தங்கியிருந்து கிறிஸ்மஸ் கொண்டாட வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். "நமக்காக அசுந்தா வெகுநேர்த்தியாய்ச் சமையல்செய்வாள்" என்றுசொல்லிப்புன்முறுவலுற்றார். ஆனல், அலெஸ் பதிலளிக்கவில்லை. "அலெஸ் திருவிழாவுக்குத் தங்கியிருந்துவிட்டுப் போ" என்று அசுந்தாவும் சொல்லவே அவன் தங்கினன்.

அவனது வருகையைப்பற்றிய செய்தி சணப்பொழுதில் அவ்விசாரணைப்பங்குமுழுவதும்காட்டுத்தீபோல் பரவவே, அவன் எப்போது அறைவீட்டைவிட்டு வெளியேவருவான் என்று ஆவலோடு காத்திருந்தது சனக்கூட்டம்.

அசுந்தாவும்அலெஸூம்கோயிலுக்குள் நுழைந்தபோது, தரையில்ஒருசிறிய ஊசிவிழுந்தாலும் சப்தம்கேட்கும்என்று சொல்லத்தக்க அளவிலே சனக்கூட்டத்தில் நிசப்தம் நிலவியது.

அலெஸ்நேரே கிருதியண்டை சென்றபிறகு சனங்கள்பக்கந் திரும்பி "நான் மாபெரும்பாதகம் புரிந்தேன். தனதுஉயிரைவிடப் புண்ணியத்தை அதிகமாகமதித்த ஒருமாசற்றபெண்ணைக் கொன்றேன். தேவன் எனக்குப்பொறுத்தல்தந்தருளுவாராக. உங்கள்மன்னிப்பையும் கோருகிறேன்" என்றான்.

சிலநிமிஷங்களுக்குப் பிறகு நிறைவேறிய திவ்வியபலிபூசையின்போது அசுந்தாவும், அலெஸூம் ஒருவர்பக்கத்தில் ஒருவராக முழந்தாளிட்டுத் திவ்விய சற்பிரசாதநாதரை உட்கொண்டனர்.

அலெஸ்தற்போது ஒருசந்நியாசமடத்தில் தோட்டக்காரனக வேலை செய்துவருகிறார். மரிய [illegible] பேறுபட்ட [illegible] போதும், அர்ச்சியசிஷ்டப்பட்டம் அருளப்பட்டபோதும் இவர் ரோமாபுரிக்குப் போகவில்லை. திருச்சடங்குகளின்போது சனங்களின்கவனம் பெரும்பாலும் தன்மீதே செலுத்தப்படும் என்பதை ஊகித்தே இவர் அவ்[illegible]க்கு விஜயஞ்செய்ய[illegible].

## செபமாலையும் சுவிசேஷமும்

### செபமாலையும் சுவிசேஷமும்

களிகூர்ந்த காரணிக்கம் III.

"அந்நாட்களிலேசம்பவித்ததேதெனில்: உலகமுழுமையும் குடிக்கணக்கு எழுதப்படும்படியாகச் செசார் அகுஸ்துஸ் இராயனிடத்திலிருந்து ஓர் கட்டளைபிறந்தது. ஆதலால் எல்லாரும் தங்கள் பேர்எழுதிக் கொடுக்கும்பொருட்டு, தங்கள் தங்கள் சொந்த ஊருக்குப் போனர்கள். அப்படியிருக்க, சூசையப்பர் தாவீதின் கோத்திரத்தையும் குடும்பத்தையும் சேர்ந்தவராகையால், கெற்பவதியான தம்முடையமனைவி மரியம்மாளோடு பேரெழுதிக் கொடுக்கும்படியாக, கலிலேயாவிலுள்ள நசரேத்தைவிட்டு யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீது நகரத்துக்குப்போனர். அவர்கள் அங்கே இருக்கையில் சம்பவித்ததேதெனில், அவளுக்குப் பேறுகாலம் நிறைவேறிற்று. அவள் தன் தலைச்சன்பிள்ளையைப்பெற்று, துணிகளால் அவரைச்சுற்றி முன்னிட்டியில் கிடத்திவைத்தாள். ஏனெனில், சத்திரத்தில் அவர்களுக்கு இடமில்லாமல் போயிற்று. அப்போது அந்தநாட்டில் சிலஇடையர்கள்விழித்திருந்து, தங்கள் கிடைக்குச் சாமக்காவல் காத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது இதோ, ஆண்டவருடையதூதன் அவர்களருகே வந்துநிற்க, தெய்வீகப்பிரகாசம் அவர்களைச்சூழ்ந்துஒளிர, அவர்கள் மிகவும்பயந்து அஞ்சினர்கள். ஆனல் தேவதூதன் அவர்களைநோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; ஏனெனில் இதோ, எல்லாச்சனத்துக்கும் மகாசந்தோஷத்தை வருவிக்கும் சுபசெய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். அதேதெனில், இன்று தாவீதின்நகரத்தில் கிறீஸ்துநாதராகிய இரட்சகர் உங்களுக்காகப் பிறந்திருக்கிறார்; குழந்தையைத் துணிகளால்சுற்றி முன்னிட்டியில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றார். என்றவுடனே வானுலகசேனையின்கூட்டம் அந்தத்தேவதூதனேடுசேர்ந்து, சருவேசுரனைத் துதித்து உன்னதாஸ்தலங்களிலே சருவேசுரனுக்கு மகிமைப்பிரதாபமும், பூலோகத்திலே நல்லமனதுள்ளவர்களுக்குச் சமாதானமும் உண்டாகக்கடவது என்றார்கள்.

பின்னும் சம்பவித்ததேதெனில், தேவதூதர்கள் அவர்களைவிட்டுப் பரலோகத்துக்குப் போனவுடனே, இடையர்கள் ஒருவரொருவரைநோக்கி: நாம் பெத்லகேம் மட்டும்போய், சம்பவித்ததும், ஆண்டவர் நமக்கு அறிவித்ததுமாகிய இந்தச்சங்கதியைப் பார்ப்போமாக என்று பேசிக்கொண்டு தீவிரமாய் வந்து, மரியம்மாளையும் சூசையப்பரையும் முன்னிட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையுங் கண்டார்கள். கண்டு, அந்தக்குழந்தையைக்குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைஅறிந்துகொண்டார்கள். (லூக். II. 1—17)

அப்படியே ஏரோதரசனுடைய நாட்களில் யூதாவின் ஊராகிய பெத்லகேமிலே யேசுநாதர்பிறந்திருக்கையில் இதோ கீழ்த்திசையில்நின்று சோதிடசாஸ்திரிகள் எருசலேம்நகருக்கு வந்து, யூதருடைய இராசாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? ஏனெனில், கீழ்த்திசையில் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரை ஆராதிக்கவந்தோம் என்றார்கள். ஏரோதரசன் இதைக்கேட்கவே கலங்கினன். ஜெருசலேம்முழுதும் அவனேடு கலங்கினது. பின்னும்அவன் பிரதான ஆசாரியரையும், சனத்தின்வேதபாரகரையும் ஒன்ருய்க்கூட்டி கிறீஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடம் விசாரித்தான். அவர்கள் அவனுக்குச் சொன்னதாவது: யூதாவின் பெத்லகேமஊரில்தான்; ஏனெனில் தீர்க்கதரிசியால் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது; "நீயோ

(தொடர்ச்சி 5-ம் பக்கம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### சற்பிரசாத மகாநாடு

ஸ்பானியதேச பார்சலோனு நகரிலே வருகிற 1952-ம் ஆண்டு நடந்தேறவிருக்கின்ற சர்வதேச சற்பிரசாத மகாநாட்டின் திகதிகள் வைகாசி 26-ந்திகதி முதல் ஆனி 1-ந்திகதிவரையிலேஎனக் குறிக்கப்பட்டுள்ளன. பரிசுத்த பாப்பரசர் பார்சலோனுநகரின் கிறெகறி கசோஸ் மேற்றிராணியாருக்கு அனுப்பிய திருமுகம் ஒன்ருலே இது அறியப்படலாயிற்று. இந்தப் பார்சலோனுச் சமாகமம், கடந்தபதினுன்கு வருடங்களில் நடைபெறும் முதலாவது சர்வதேச சற்பிரசாதமகாநாடாகும். இதற்குமுன் கடைசியான மகாநாடு ஹங்கேரியின் தலைப்பட்டணமாகிய புடாபெஸ்றநகரில் 1938-ம் ஆண்டு வைகாசிமாதம் நிகழலாயிற்று. இதுவரை 34 சர்வதேச சற்பிரசாதமகாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. பிரான்சிலே லில் நகர் மேற்றிராணியாரான காஸ்ரன் டே செகுர் ஆண்டவரின் முயற்சியாலே முதலாவது சர்வதேச சற்பிரசாதமகாநாடு அந்நகரிலே 1881-ம் ஆண்டு நடந்தேறியது.

### பாப்பரசரின் அனுதாபம்

அர்ச். சின்னத்தெரேசம்மாளின் 'சின்னத்தாய்' என அறியப்பெற்றிருந்த யேசுவின் அக்னேஸ்தாயாரது மரணத்தைப்பற்றியசெய்தி தமக்குக் கிடைத்ததும் அவரை நன்ருயறிந்த பரிசுத்தபாப்பரசர் லிசியேபதியிலுள்ள கன்னியாஸ்திரீமாருக்குப் பின்வரும் அனுதாப செய்தியை அனுப்பியிருந்தார். நமது "மிகஅருமையான யேசுவின் அக்னேஸ் குமாரத்தியின் மரணசெய்தியைக் கவலையுடன் கேள்விப்பட்டு, அவருக்குச் சகோதரியும், தாயுமாய் இரண்டுமாயிருந்த அர்ச்சியசிஷ்டவளின் சலுகையாலே உங்கள் சங். சிரேஷ்டதாயாரின் ஆத்துமத்துக்குத் தேவனுடையஇரக்கம் கிடைக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து, திருமுகத்தின் ஜெனெவியெவ் (செலின்) கன்னியாஸ்திரீயாகிய தங்களுக்கும், ஏனைய கன்னியாஸ்திரீமார் எல்லோருக்கும் நமது அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் அருளுகின்ருேம். சங். அக்னேஸ்தாயார் சென்ற ஆடிமாதம் 15-ந்தேதியன்று திடீரெனநோய்கண்டு, மறுநாள் கார்மேல்மாதா திருநாளன்று அந்தியதேவதிரவிய அனுமானங்களைப்பெற்றுக் கொண்டார்.

### ஆறு குருசகோதரர்கள்

ஒல்லாந்திலே ஹல்ஸ்ற் பட்டினத்தைச்சேர்ந்த வான் வேஸ்பேர்க் என்பவரின் குடும்பமானது குருத்துவபதவிக்கெனத் தனது ஆறுபுதல்வர்களை உதவியிருக்கிறது. இவர்களிலே அதிகஞ்சமீபத்தில் குருப்பட்டம்பெற்றவர் 26 வயசுடையவரான வண. பிறிற்ஸ் சுவாமியாரே. இவர் தமது முதற்பூசையைத் தாம்பிறந்த பட்டினத்திலே நிறைவேற்றினர். இவரது சகோதரர்களில் நால்வர் தங்கள்மாமனரின் முன்மாதிரியைப்பற்றி வெள்ளைக்குருமார்சபைக் குரவர்களாயினர். ஆனல், வான்வேஸ்பேர்க் என்பவரின் குடும்பமே ஒல்லாந்தில் கூடியதொகையானகுருமாரைக் கொண்டதன்று. ஹேக்நகரைச் சேர்ந்த பென்னக் என்பவரின் குடும்பம் ஏழுசகோதர குருப்பிரசாதிகளையும், ஓர் கன்னிகா சகோதரியையும் கொண்டு விளங்குகின்றது.

### தேவதாயார் வசித்தஇல்லம்

துருக்கியின் தென்பகுதியிலே பரிசுத்த தேவதாயார் ஒரு தொகையான வருடகாலம் சஞ்சரித்திருந்தாரெனப் பாரம்பரியமாகச் சொல்லப்படுகின்ற யுசிக்னேவி குன்றின்மீது சிமேர்னு நகரின் டெஸ்கல்வி அதிமேற்றிராணியார் சமீபத்திலே திவ்விய பூசை நிறைவேற்றியிருக்கின்ருர். இந்தஸ்தலம் தற்போது இடிகரையாயிருக்கின்ற எபேசஸ்நகருக்கு அணித்தாயுள்ளது. அவ்வேளை துருக்கி, சீரியா லெபனன், சைபிறஸ் எனும்நாடுகளிலிருந்து அப்பகுதியிலே முன்னில்லாத பெருந்தொகையினரைக்கொண்ட பெரியயாத்திரை ஒன்று துருக்கியிலே பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியாய் இருந்துவருகின்ற கரூயோ அதிமேற்றிராணியார் தலைமையில் நடபெறலாயிற்று.

### 'செனக்கிள்' அசனசாலை

யேசுநாதர் தமது சீஷர்களுடன் கடைசிஇராப்போசனஞ் செய்தஇடமும், அவர் உத்தானமானபின் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனையான இடமும், அப்போஸ்தலர்மேல் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் இறங்கியஇடமுமாகிய 'செனக்கிள்' எனும் திருஅசனசாலை பிரான்சீஸ்கன்சபையாரின் பாதுகாப்பில் திரும்பவும் ஒப்படைக்கப்படுமென்ற ஓர்புதிய நம்பிக்கை பிறந்திருப்பதாக அச்சபையாரின் வெளியீடாகிய 'லாரெரு சாந்தா' சஞ்சிகை தெரிவிக்கின்றது. கிறீஸ்துவேதத்தின் தொட்டிலாகிய இது பதினன்காம் நூற்ருண்டிலே அவர்களிடம் ஒப்படைக்கப்படலாயிற்று. ஆனல், ஓர் நூற்ருண்டின்பின் இது முஸ்லீம்களால் கைப்பற்றப்பட்டிருந்து 1948-ம் ஆண்டு யுத்தத்தின் விளைவாக இசிறவேல் அரசாங்கத்தின்வசம் தற்போது இருக்கின்றது. இந்தக்கிறீஸ்துவ திருசேத்திரத்தைத் தான் வைத்திருக்கக்காரணம், அது தாவிதனின் சமாதியாகவும் கொள்ளப்படுவதேயென்று இசிறவேல் அரசாங்கம் வீணியாயஞ்சொல்லுகின்றது. விசேஷப்பட்ட எபிரேயபண்டிதர்களோ இதனை ஒப்புக்கொள்ளவில்லை.

### பரிசுத்தநாட்டுயாத்திரைகள்

ஜெருசலேமிலே ஜெத்செமனியதோட்டத்தின் சிரேஷ்டரான வண. ஈயூஜினி ஹோட் சுவாமியார் தற்போது லண்டன் நகரில் நிற்கின்றர். இவர் ஜெருசலேமிலே 22 வருடகாலம் செலவிட்டிருக்கின்ருர். பரிசுத்தநாட்டிற்குத் திருஸ்தலயாத்திரைகள் திரும்பவும் நடைபெறத் தொடங்கியிருப்பதாகவும், சென்ற ஆவணி முதல் வருகிறஐப்பசி வரையிலே சுவிற்சர்லாந்திலிருந்து நான்கு யாத்திரைகளும், அமெரிக்கஐக்கியதேசம், பிரான்ஸ், இத்தாலிஎனும் நாடுகளிலிருந்து மும்மூன்று யாத்திரைகளும், பிரித்தானியிலிருந்து யுத்தத்துக்குப்பிறகு ஓர் யாத்திரையும் நடைபெறவிருப்பதாகவும் இவர் தெரிவித்திருக்கின்ருர். இம்மாதம் 27-ந்திகதி லன்காஸ்றர் மேற்றிராணியாரான பிளின் ஆண்டவர் தலைமையில் லிவர்ப்பூல்நகரிலிருந்து புறப்படும் யாத்திரையிலே இவரும் சேர்ந்துசெல்வார்.

### ஐம்பது ஆண்டுகளுக்குமுன்

ஓர் பிரான்சியரான கபிரியேல் கார்கம் என்பவர் றெயில்வேயிலே பிரயாணஞ்செய்து தபால்களை இனம்வகுப்போராகக் கடமைபார்த்துவரும்போது 1899-ம் ஆண்டு மார்கழிமாதம் 18-ந்திகதி ஓர் றெயின்வண்டி விபத்துக்குள்ளாய் மிகமோசமாகக்காயமடைந்தார். ஆகாயத்திலே இருபது அடி உயரத்துக்குத் தூக்கியெறியப்பட்டுக் கீழேவிழுந்து மணித்தியாலக்கணக்காக அறிவுநினைவற்றுக் கிடந்தார். அவர் உடல் ஒரே காயமாயிருந்தது. பிந்த இவர் தனது இருகால்களிலும் முற்ருகத் திமிர்வாதங்கண்டு வருந்தினர். அங்கோலீம் ஆஸ்பத்திரியிலே இவர் 20 மாதங்களாக இருந்துவந்தபின் அவருடைய கால்கள் அழுகத்தொடங்கின. அவர் குணமடைவது அசாத்தியமென்று டக்றர்மார் அவரைக் கைவிட்டுவிட்டனர். 1901-ம் ஆண்டு ஆவணிமாதம் 20-ந்திகதி அவர் லூர்துபதி முற்றவெளியிலே ஓர் காவுகட்டிலில் கிடந்தார். அப்போது அவர் தன்னை யாரோ எழுந்திருக்கும்படி தூண்டுவதாக உணர்ந்தார். தன்னைப்புடைசூழ்ந்துநின்ற சனங்களால் உதவிசெய்யப்பெற்று மிகுந்தகஷ்டத்துடன் தனது பாதங்களில் ஊன்றிநின்ருர். மறுநாள் திமிர்வாதம் நீங்கிவிடவே சிறிதுவேளையால் அவர் முழுப்பலமடைந்தார். தற்போது 70 வயசுள்ள இவர் சமீபத்திலே நடைபெற்ற பிரான்சியயாத்திரையின்போது லூர்துபதியிலே காவுகட்டில்களில் கொண்டுபோகப்பட்ட பிணியாளரான யாத்திரிகளைத் தூக்கிப்பறிப்பதில் மிகுந்தஉற்சாகத்துடன் பணியாற்றினர். இவர் இம்முறை அத்திருப்பதிக்கு ஓர் விசேஷநோக்கமாக யாத்திரை செய்திருந்தார். அதாவது அத்திருசேத்திரத்தில் தான் அற்புதமாகக் குணமடைந்த 50-ம்வருட பொன்யூபிலிவிழா பற்றியேயாகும்.

—மலேரியாவைத் தீவிரமாகக் குணப்படுத்தக்கூடியதாய்ச் சமீபத்திலே அமெரிக்கஐக்கியதேசத்தில் கண்டுபிடித்துச் செய்யப்பட்ட 'பிறிமக்குயின்' எனும் மருந்தானது கோறியாவிலிருந்து தங்கள் நாட்டுக்குத் [illegible]க்கணக்கான அமெரிக்கபோர்வீரர்களுக்கேகொடுத்து பரீட்சாதனை நடத்தப்படுகிறது. இந்தமருந்து தற்சமையம் பரிசோதனைக்குமாத்திரமே கிடைக்கக்கூடியதாய்இருக்கிறது.

### இஸ்பிரீ. ஆக. பின்வரும் 19-ம் ஞாயிறு

**சுவிசேஷ வாசிப்பு**

(மத். 22 : 1—14)

அக்காலத்தில் யேசுநாதர் மறுமொழியாகப்பிரதான ஆசாரியருக்கும் பரிசேயருக்கும் உவமைகளால்வசனித்துத் திருவுளம்பற்றினதாவது: பரலோக இராச்சியமானது தன்குமாரனுக்குக்கலியாணஞ்செய்வித்த ஓர் இராசனுக்கு ஒப்பாயிருக்கின்றது. அவன் தன்ஊழியர்களையனுப்பிக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டவர்களைக் கூப்பிட்டான். ஆனல், வருவதற்கு அவர்களுக்கு மனமில்லாமற்போயிற்று. மறுபடியும் அவன் வேறேஊழியர்களையனுப்பி: இதோ! என்விருந்தை முஸ்திப்புச்செய்தேன். என்எருதுகளும, கொழுக்கவளர்ந்தமிருகங்களும் அடிக்கப்பட்டன; எல்லாம்முஸ்திப்பாயிற்று; கலியாணத்துக்கு வாருங்களென்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்கள் என்ருன். ஆனல, அவர்கள் அசட்டைசெய்து, ஒருவன் தன்வயல்நில வீட்டுக்கும், வேருெருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். மற்றவர்களோ அவனுடைய ஊழியர்களைப்பிடித்து அவமானப்படுத்திக் கொலைசெய்தார்கள். அரசனேவெனில் அதைக்கேட்டபோது சினந்து தனது சேனைகளையனுப்பி அந்தக்கொலைப்பாதகர்களைச் சங்கரித்தான். அவர்களுடைய பட்டணத்தையும் சுட்டெரித்தான். அப்போது அவன் தன்பணிவிடைக்காரரை நோக்கிச்சொல்லுவான்: கலியாணவிருந்து முஸ்திப்பாயிற்றே; ஆனல், அழைககப்பட்டவர்கள் அதற்கு அபாத்திரவான்கள் ஆனர்கள். ஆதலால், நீங்கள் வழிச்சந்திகளிற்போய், உங்களுக்குத்தென்படும் யாவரையும் கலியாணத்துக்குவரவழையுங்கள் என்ருன். அப்படியே பணிவிடைக்காரர் வீதிகளிற் புறப்பட்டுப்போய்க் கண்ட நல்லவர்கள் தீயோர்கள் யாவரையுங் கூட்டிவந்தார்கள். கலியாணச்சாலையும் பந்தியமர்ந்தவர்களால் நிறைந்தது. அப்படியிருக்க, அரசன் விருந்தினரைப்பார்க்க உள்ளேபிரவேசித்துக் கலியாணவஸ்திரம் அணியாத ஓர்மனிதனை அங்கேகண்டு: சிநேகிதனே! கலியாண ஆடையில்லாமல் நீ இங்கே எப்படிப் பிரவேசித்தாய்? என்று அவனைக்கேட்டான். அவனே மௌனமாயிருந்தான். அப்போது அரசன் பணிவிடைக்காரர்களை நோக்கி: இவனுடைய கைகால்களைக்கட்டிப் புறம்பேயுள்ள இருளில் அவனைத்தள்ளுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்புமிருக்கும் என்ருன். அவ்விதமே அழைக்கப்பட்டவர்கள் அநேகர்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சொற்பப்பேர் என்ருர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவர்த்தமானம்

## ஜேர்மனிய அகதிகள்

ஜேர்மனியிலும், ஆஸ்திரியாவிலும் ஹிற்லர் அதிகாரஞ்செலுத்தியகாலத்திலே அவரின் நட்டணைகளைத் தாங்கவாற்றாது தங்கள்வீடுவாசல்களைவிட்டு வெளிகொண்டு அகதிகளாகப் பிறநாடுகளிற்போய்க் குடியேறிய நான்கு லட்சம் ஜேர்மனியர், ஆஸ்திரியர்களிலே மூன்றில் ஒருபங்குபேர் இங்கிலாந்திசென்றனர். இவர்களில் அதிகப்பற்றுனோர் பிறநாடுகளுக்குச் செல்ல எண்ணியிருந்தபோது, யுத்தம் தொடங்கியமையாலே வளர்ந்தவர்களான 75,000 பேரும், 15,000 பிள்ளைகளும் பிரித்தானிமுழுவதிலும்ஆங்காங்குபோய்ச் சஞ்சரிக்கலாயினர். இவர்களைப்பாதுகாப்பதிலே கத்தோலிக்கர், புறொட்டஸ்தாந்தர், யூதர் என்ற பேதமில்லாது பிரித்தானியர்கள் பொருள்உதவிவந்தார்கள். லண்டன்நகரிலே கருதினல் ஹின்ஸ்லி ஆண்டவர்நிறுவிய கத்தோலிக்க கம்மிற்றி 1,900 வளர்ந்தவர்களையும், 650 பிள்ளைகளையும் தனது பாதுகாப்பில் கொண்டிருந்தது.

## பிரான்சிய மலையேற்றகாரர்

பிரான்சிய அல்பைன்கிளப்பின் ஆதரவைப்பெற்றுச் சிலமாசங்களின்முன் இந்தியாவுக்குவந்த பிரான்சிய இமயமலையேற்ற கோஷ்டியானது கிழக்கும்மேற்குமாக முறையே 25,645 அடியும், 24,391 அடியும் உயரமுள்ள நந்தாதேவிச் சிகரங்களில்ஏறி வெற்றியீட்டியிருக்கின்றது. ஆனால் இந்த ஏற்றத்தின்போது அக்கோஷ்டியின் தலைவரான றோகர்துபிளா என்பவரும், அவர்துணைவரான ஜில்பேட் விக்னெஸ் என்பவரும் கிழக்குநந்தாதேவிச் சிகரத்தில் ஏறியபின்னர்சென்றஆனி 29-ந்திகதி காணாமற்போயினார்கள். இரு சிகரங்களுக்குமிடையிலுள்ள தொடர் மலையைக் கடக்கமுயன்றபோதுதான் இவர்கள் உயிரிழந்ததாகக் கருதப்படுகிறது. எஞ்சினோர் சேமமே டில்லி நகருக்குத் திரும்பினார்கள்.

## சைபீரிய மறுறெயில்வே

ருஷியாவின் தலைப்பட்டணமாகிய மஸ்கோநகரிலிருந்து சைபீரியாவின் கிழக்கு அந்தத்திலுள்ள விலாடிவஸ்ரொக்வரையிலே தற்போது 1863 மைல்நீளமான ஓர்றெயிற்பாதை இருந்துவருகிறது. சோவியற்நாட்டுக்கும் தூரகிழக்குநாடுகளுக்குமிடையே இராணுவ பொதுசன போக்குவரத்து வெகுவாக அதிகரித்துக்கொண்டுவருவதாலே அதன்பக்கமாக மற்றோர் றெயிற்பாதையைத் திறக்கும்வேலை திரும்பவும் நடைபெற்றுவருகிறது. இப்புதியபாதையை 1950-ம்ஆண்டிலே போட்டுமுடிக்க அப்போது திட்டஞ்செய்யப்பட்டிருந்தது. ஆனால், அது பின்போடப்பட்டுத் தற்சமையம் கோறியாவில்ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாகத் திரும்பத் தொடக்கப்பட்டிருக்கிறது.

## ருஷிய தூதுக்கோஷ்டி

சான்பிரான்சீஸ்கோ மகாநாட்டுக்குத் திரு. அன்ட்றே கிறோமிக்கோவின் தலைமையிற்சென்ற தூதுக்கோஷ்டி இந்நகரிலே 38 அறைகளைக் கொண்ட ஓர்பெரிய மனையை நாள் வீதம் 90 பவுண் அதாவது 1,215 ரூபாவுக்கு வாடகைக்கமர்த்தித் தங்கியிருக்கலாயிற்று. இது 15-ம்லூயிஸ் அரசரின் மாளிகைத்தளபாடங்களையும், இரண்டரைலட்சம் புத்தகங்களுள்ள ஓர் நூல்நிலையத்தையும், சுத்தமாபிள்கற்களால்அமைத்த ஸ்நான அறைகளையும்கொண்டுள்ளது. இந்தக்கோஷ்டியில் அடங்கியநாற்பது ருஷியர்களும் அங்கு கார்களை வாடகைக்குஅமர்த்த விரும்பாது தங்கள்சொந்தக் கார்களிலே வாஷிங்டனிலிருந்து அந்நகர் சென்றிருந்தார்கள். ஏனெனில் வாடகைக்கார்களுக்கு உலகில்அதிகம்கூடிய வீதமாக மைலொன்றுக்கு அங்கே 3 சிலின் 8 பென்ஸ் அதாவது 2 ரூபா 35 சதம் அறவிடப்படுகிறது.

## கம்யூனிஸ்தரும் யப்பானும்

சமாதானஉடன்படிக்கைக்குக் கைச்சாத்திடப்பட்டமையாலும், அமெரிக்க-யப்பானிய பாதுகாப்புஒப்பந்தத்தாலும் யப்பானியராகியநாங்கள் மேற்குச்சனநாயக நாடுகளின்கட்சியில் சுத்தமாகச் சேர்ந்துவிட்டோம்; நிச்சயமாகவே கம்யூனிஸ்தகுழுவில் யப்பான்சேர்வது முற்றுமேஇயலாக்கருமமாகும்; பூகோள-அரசியல் நிலைமைகள்காரணமாக யப்பான் மூன்றாவது தரப்பட்டபலமாக இருக்கமுடியாது; சமாதானஉடன்படிக்கையாலே சர்வதேசகுடும்பத்தில் யப்பான்திரும்பவும் இப்போது சேர்ந்திருக்கிறது. ஆனால், யப்பானியர்கள் ருஷியாவுடனும், சீனாவுடனும் இன்றுமேயுத்தநிலைமையில்இருந்துகொண்டுவருவதையிட்டுக் கவலைகொள்ளுகிறோம்; இதுவேயப்பானின் பெரியபிரச்சினையாகுமென்று யப்பானிய பிரபலபத்திரிகைகள் சான்பிரான்சீஸ்கோ உடன்படிக்கைபற்றி எழுதியிருக்கின்றன.

## யூதர்களின் குடியேற்றம்

யூதர்களின் இசிறவேல்நாட்டிலே பிறநாடுகளிலிருந்துவரும் யூதர்களைக் குடியேற்றும்விஷயமாய் அதன் அரசாங்கம் பெருஞ்சங்கடங்களை மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. தற்போது அந்நாட்டின் குடிசனத்தொகை 1¼ லட்சம்பேர். கடந்தஇருவருடங்களிலும் ஏமென், போலாந்து உட்பட அறுபதுநாடுகளிலிருந்து ஐந்து லட்சம்யூதர்கள் அங்குபோய்க் குடியேறியிருக்கிறார்கள். ருஷியாவிலிருந்தும் சிலர்போய் அங்கு குடியேறியுள்ளனர். ஆனால், சமீபகிழக்குநாடுகளிலிருந்துஅங்குபோய்க் குடியேறுகின்ற யூதர்களில் அரைவாசிப்பேருக்குமேல் மலேரியா, ரைபோயிட் எனப்படும் குடற்சுரம், க்ஷயரோகமுதலாம் தொற்றுநோய்களால் பீடிக்கப்பட்டிருப்போராய் இருப்பதாலே இசிறவேல்அரசாங்கம் பெரிதும்கவலைகொண்டதாய்க் காணப்படுகின்றது.

## மலேரியாப் புதியமருந்து

மலேரியாவராமல் தடுப்பதற்கும், வந்தபின்அதனைக் குணப்படுத்துதற்குமாகத் தற்போது தாராளமாகப் பாவிக்கப்பட்டுவரும் அற்றுபிறைண் அல்லது குயினைனைக்காட்டிலும் அதிகம் சக்திவாய்ந்ததென்று கொள்ளப்படும் புதிய மலேரியாமருந்து ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துச் செய்திருக்கின்றார்கள். இதற்கு இன்னுமே பெயரிடப்படவில்லை. இது மலேரியா வராமல் தடுத்துவிடுவது அல்லாமல் அதைக்குணப்படுத்துவது அல்ல. தற்சமையம் உலகமுழுவதிலும் 50 கோடி சனங்களைப் பாதித்துவருகின்ற மலேரியாவை எதிர்த்துப் போராடுவதிலே இது மிக்கானஆற்றல்வாய்ந்துள்ளதாம். இதிலே ஒரு அவுன்சைஎடுத்து ஐந்து வருடத்துக்குமேற்படக் கொஞ்சம் கொஞ்சமாக ஒருவர் பாவித்துவந்தால் எஞ்சியசீவியகாலமுழுவதும் மலேரியாவே அவரை எட்டிப்பாராதென்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். நிலக்கரியின் அம்சங்களிலிருந்து இது மிக இலகுவில் செய்யப்படக்கூடியதாகும்.

## ஸ்பெயினும் கம்யூனிஸமும்

"நாஸ்திக கம்யூனிஸத்தின் முன்னேற்றத்தைத் தடுத்துநிறுத்த நாம் உள்ளபடியே விரும்பினல் நமக்குத் தோற்றுகிறபடி, ஸ்பெயினை வெளியே தள்ளிவிடுவது முடியாதகாரியம்" என்று சமீபத்திலே பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கால் நாடுகளிலுள்ள திருசேத்திரங்களைத் தரிசித்துவிட்டுத்திரும்பிய அமெரிக்க போஸ்றன்நகர் அதிமேற்றிராணியாரான குஷிங்ஆண்டவர் கூறுகின்றார். "ஸ்பெயின் எந்தவேளையிலும் கம்யூனிஸத்துக்கெதிராய் இறங்கத் தயாராயிருக்கிறது; அவசியம்நேருமிடத்து அது தன்ன[illegible]களை எதிர்த்துப்போராடும்; ஆனால், பொருளாதார—இராணுவஉதவியை அதுவேண்டி நிற்கின்றது; இந்தஉதவி அமெரிக்காவிலிருந்தே கிடைக்கக்கூடியதாகும்; ஜெனறல் பிறங்கோ அவர்கள் கபடற்றவராயும், சமயபக்தியுடையவராயும், கண்டிதமுள்ளவராயுமிருக்க நாம் கண்டோம்" என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

# உங்களுக்குத் தெரியுமா?

**1. உலகிற் செய்யப்பட்ட மிகப் பெரிய பீரங்கிஎது?**

1453-இல் ஏர்பன் (Urban) என்னும் கங்கேரியன்ஒருவன் மூகம்மது என்னும் துருக்கியசுல்தானுக்காக மிகப்பெரிய பீரங்கிஒன்றை இரும்புவளையங்களைப்பூட்டிச் செய்தான். இப்பீரங்கி 800 இறாத்தல் பாரமுள்ள குண்டைச் சுடக்கூடியதாகவிருந்தது. இதைஅப்பொழுது சுல்தான் முற்றுக்கைஇட்டிருந்த கொன்ஸ்தாந்திநோப்பிள் கோட்டைச்சுவருக்கு 60 எருதுகள் இழுத்துச்சென்றன. 200 ஆட்கள் தள்ளிக்கொண்டு சென்றார்கள். இப்பீரங்கி சிலதடவைகள் மாத்திரம் சுடப்பட்டது. ஓர் முறைஅது வெடித்துஅதில்வேலைசெய்தவர்கள் எல்லாரையும்கொன்றது அதுசுட்டகுண்டு கோட்டையின்கதவைத் தகர்த்தது. துருக்கர் கோட்டைக்குள்புகுந்து நகரைப்பிடித்தனர்.

**2. பறவைகளின்முட்டை எவ்வளவு பருமைவரையில்உண்டு?**

ஊங்காரப்பறவையின் முட்டை ஒரு பயறளவு. தீக்கோழியின்முட்டை மனிதனின் தலையளவு. முற்காலத்தில் வாழ்ந்து மறைந்துபோன பறவைகள் சில தீக்கோழிஇடுவதிலும்பார்க்கப் பெரியமுட்டைகள்இட்டன. நியூசிலாந்தில்வாழ்ந்து 500 ஆண்டுகளின்முன் மறைந்துபோன மோவா (Moa) என்னும் பன்னிரண்டடி உயரமுள்ள பறவை ஒருஅடிநீளமுள்ள முட்டையிட்டது. மடகஸ்காரில் காணப்பட்டு மறைந்துபோன றொக் (Rock) என்னும்பறவை 2 கலன்நீர் பிடிக்கக்கூடியதும், தீக்கோழிமுட்டையிலும்பார்க்க ஆறுமடங்குபெரியதுமான முட்டையிட்டது. றொக்கென்னும் இப்பறவையே அராபிக்கதையில் ஆனையிறஞ்சிப்புள்எனக் கூறப்பட்டது என்று சிலர்கூறுகின்றனர்.

**3. பூச்சிகள் எப்படி மோப்பம் பிடிக்கின்றன?**

பூச்சிகளின் தலையில் கொம்புபோன்று இரண்டுமயிர்கள் இருக்கின்றன. இவைகள் பூச்சிகளுக்கு மோப்பம்பிடிக்க உதவுகின்றன.

**4. தலைவலியைமாற்றும் மருந்துத்தூள்களை நாம் மருத்துவரின் ஆலோசனையின்றிப் பயன்படுத்தலாமா?**

இம்மருந்துகள் இருதயத்தை மெதுவாகஅடிக்கச்செய்து வலியைக்குறைக்கின்றன. ஆனால், தலையிடியின்காரணத்தைக் கண்டிப்பதில்லை. ஆகவே, இம்மருந்துகளால் கெடுதி ஏற்படவும் கூடும்.

**5. உலகம்முழுமையிலும் எத்தனை சினிமாக்காட்சிச்சாலைகள் இருக்கின்றன?**

உலகில் 67,129 சினிமாக்காட்சிச்சாலைகள் இருக்கின்றனவென்றும், அவைகள் நாளொன்றுக்கு 4,00,00,000 பேருக்குக் காட்சியளிக்கின்றனஎன்றும் கணக்கிட்டுக் கூறப்பட்டுள்ளது.

**6. பூக்களுக்குத் தேன் மணம் நிறம் என்பவற்றல் என்னபயன்?**

தேன் பூச்சிகளைக் கவருகின்றது. மணமும்நிறமும் பூக்களைக்கண்டுபிடிப்பதற்கு உதவுகின்றன. இரவில்மலரும் பூக்களுக்கு மணம் மிகமுக்கியம். இக்காரணம்பற்றிப்போலும் மாலைநேரத்தில் மலரும்பூக்கள் அதிகமணமுள்ளனவாயிருக்கின்றன. பூக்களின் அழகு, மணம், இனிமைமுதலியன பூச்சிகளுக்காக உண்டானவை.

**7. சதுரங்கம் (CHESS) எந்நாட்டில் தோடங்கியவிளையாட்டு?**

இதுஇந்தியாவில் தொடங்கிய விளையாட்டு. சதுரங்கம்என்பது யானை, குதிரை, தேர், காலாள்என்பன. இவ்விளையாட்டைப் பார்சீகர் இந்தியரிடமிருந்து கி. பி. 6-ம் நூற்றாண்டில் அறிந்தனர். பார்சீகரிடமிருந்து இதனை அராபியரும், பின்ஐரோப்பிய நாட்டினரும் அறிந்தனர். இன்று விளையாடப்படும் கிறிக்கெற் (Cricket) ஆட்டம் கிட்டிப்புள்என்னும் ஆட்டத்தினின்று தோன்றியதே.

**8. மிகநீளமான மண்புழு (நாங்கூழ்புழு) எங்கே ககாணப்படுகின்றது?**

ஆஸ்திரேலியாவில் மிகப்பெரிய மண்புழுக்கள் காணப்படுகின்றன. பொதுவாக ஒருமண்புழுவின்நீளம் 12 அடி. இது எரிமலைபோன்ற மேடுசெய்து அதன்உச்சியிலிருந்துசெல்லும் புற்றினுள்வாழும். இதனைச் சிரிக்கும்மீன்கொத்தி (Laughing Kingfisher) என்னும்பறவை பிடித்துஉண்ணும்.

**9. பனுமாக்கால்வாய் எங்கிருக்கிறது?**

இது வடஅமெரிக்காவுக்கும், தென்அமெரிக்காவுக்குமிடையிலுள்ளது. அத்திலாந்திக்சமுத்திரத்தையும், பசிபிக்சமுத்திரத்தையும் இணைக்கிறது. இவ்வாய்க்காலை வெட்டுவதற்கு 1879-இல் ஆலோசிக்கப்பட்டது. 1881-இல் ஒருபிரான்சியகம்பெனி இதனைவெட்டத்தொடங்கி 8 ஆண்டுகளின்பின் கைவிட்டது. மறுபடிஇது 1902-இல் தொடங்கி 1920-இல் முடிக்கப்பட்டது. இவ்வாய்க்கால் 50 மைல்நீளமும், 300 முதல் 1000 அடி அகலமுமுடையது. இது 1920-இல் வெட்டிமுடிக்கப்பட்டதாயினும் 1914-ம் ஆண்டுமுதலே கப்பல்கள் இதன்வழியாகப் போக்குவரத்துச் செய்கின்றன. தென்னமெரிக்காவைச் சுற்றாது இக்கால்வாய்வழியாகக் கப்பல்செல்வதால் 8,000 மைல்சுருங்குகின்றது.

**10. நாங்கள் எப்படிக்கேட்கிறேய்?**

ஒலிஅலைகள் நமதுகாதுச்சவ்வில் தட்டுவதால் நாம்கேட்பதற்கு ஒரு செக்கனில் 35,000 ஒலிஅலைகள் காதைத்தட்டுகின்றனஎன்று விஞ்ஞானிகள்கூறுவர்.

---

—சிறைவாசஞ் செய்துவருகின்ற ஹங்கேரிய கருதினலான மின்ட்சென்ரிஆண்டவர் ஆபத்தானநோய் கண்டு புடாபெஸ்ற்நகரில் தாம்இருந்துவந்த சிறைச்சாலையிலிருந்து செக்கோசிலவாகியாவிலே ராற்றாமலைகளிலுள்ள ஓர்ஆரோக்கியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கிறாரென 'நியூவியேனர்'எனும் வியன்னாநகர பத்திரிகை சென்ற 3-ந்திகதி செய்தி வெளியிட்டிருக்கிறது.

—பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், ஒல்லாந்து, சுவிற்சர்லாந்து, மற்றும் நாடுகளிலிருந்து றெயில்வேய்ப்பணியாளரின் யாத்திரைஒன்று இம்மாசம் 1-ந்திகதி லூர்துபதிபோய்ச் சேரலாயிற்று. இந்தச்சர்வதேச கத்தோலிக்க றெயில்வேய்ப்பணியாளரின் யாத்திரையிலிருந்து அவர்களின்சர்வதேச ஸ்தாபனம்ஒன்று அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

—ஆஸ்திறேலியதேச கத்தோலிக்கர் சென்ற 1950-ம்ஆண்டிலே விசுவாசப்பரப்புதற்சபை, திருப்பாலத்துவசபை, அர்ச் பேதுரு அப்போஸ்தலர் சபை என்பனவாய் மிஷன்களுக்கு உதவிசெய்யும் பாப்பரசாது சபைகள் மூன்றுக்குமாகப் 10,48,900 ரூபா உபகரித்திருக்கின்றார்கள். இதிலே கால்வாசிவரையில் உதவியவர்கள் மெல்போணநகர கத்தோலிக்கரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**புரட்டாசிமாதம் 1951**

| | | | |
|---|---|---|---|
| வெ | 21 | அர்ச். மத்தேயு | (சி) |
| சனி | 22 | அர்ச். வில்லநோவா தோமையார் | (வெ) |
| ஞா | 23 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 19-ம் ஞாயிறு— அர்ச். லீனப்பர் | (ப) |
| திங் | 24 | அடிமைகளை மீட்ட உபகார மாதா | (வெ) |
| செ | 25 | அர்ச். பிர்மீனப்பர் | (ப) |
| புத | 26 | அர்ச். சிப்பிரியார் | (சி) |
| வியா | 27 | அர்ச். கோமஸ், தமியான் | (சி) |


# சத்தியவேத பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
புரட்டாசிமாதம் 20-ந் திகதி


## நாஸ்திகத்தின்பயன்

"வினைவிதைத்தவன் வினை அறுப்பான்; தினைவிதைத்தவன் தினைஅறுப்பான்" என்பது ஓர்மணிமொழியாகும். இன்றையஉலகில் சோவியற்அரசு கொண்டுள்ளயுக்திக்கொவ்வாத நவீனகொள்கைகளிலே கடவுள் இல்லையெனப் பிதற்றுகின்ற நாஸ்திககொள்கையும் ஒன்று. தனதுநாட்டிலும், தான்அடிப்படுத்தியுள்ள நாடுகளிலும், மற்றும்நாடுகளிலும் அதுமக்களின் உள்ளங்களிலிருந்து கடவுட்பற்றையும்,சமயபக்தியையும் அழித்தொழித்து வருவதின் பயன் இப்போதுகைமேல் கிடைத்து வருகிறது. அதாவது கடவுட்பற்றையும், சமயபக்தியையும் கைவிட்டவர்கள் பாவபுண்ணியம்என்ற உணர்ச்சிகெட்டு, 'எங்கும் உளனெருவன்காணும்' என்று அஞ்சுவதாகிய கடவுட்பயம் அற்று, சகலவிதமான பாபச்செயல்களையும் மனந்துணிந்து மனம்போலச் செய்து வருகின்றார்கள். அவற்றில் ஒன்று தற்கொலையாகும்.

இந்தக்கொள்ளைநோய் தற்போது இலங்கையிலும் மும்முரமாகத் தலைகாட்டியிருக்கின்றது. அவ்வாறு தற்கொலை செய்வோர் வாழ்க்கையில்அலுப்புத்தட்டிவிட்டது என்றவாறான நியாயங்களைச் சொல்லிக்கொண்டுநச்சுத்திராவகங்களை அருந்தித் தங்கள்உயிருக்கு அந்தோ!உலைவைக்கின்றனர். இந்தத் தற்கொலைகளைத் தடுக்கும்உபாயமாக எந்தத் திராவகத்தையும் விற்பனவுசெய்வதைச் சட்டமூலமாகக்கட்டுப்படுத்திவிடவேண்டுமென்று சிலர்கூறும் ஆலோசனை ஒருபோதுமே அவற்றைக் கட்டுப்படுத்தப் போவதில்லை. ஆனால், சமயபக்தியாலும், நீதிநூல்களின் நியாயபோதனையாலுமே அவற்றைக்கட்டுப்படுத்தலாம். அவ்வாறு கட்டுப்படுத்தக் கையாடவேண்டிய முதல் உபாயம், நாஸ்திககொள்கையைப் பரப்பிவருகின்ற கம்யூனிஸ்தர்கள்முதலாம் நாஸ்திகர்களைக் கட்டுப்படுத்துவதே.

கிறீஸ்துசமயபோதனை தற்கொலையை அறவேவிலக்குகின்றது. ஒவ்வோர்கிறீஸ்தவனும் தனது பாலியப்பிராயத்திலிருந்தே கடவுள்தனது இரக்கமுள்ள பிதாஎன்றும்,தனதுஆத்துமத்தின் அதிமேலான நன்மைக்காகவே அவர் துன்பங்கள், கஷ்டங்கள்,உபாதைகளைத் தனக்கு வரவிடுகிறாரென்றும் படிப்பிக்கப்படுகின்றான். தற்கொலை பெரியபாவம்; ஏனெனில், அவனுடையஉயிர் உள்ளபடியே கடவுளுக்குச்சொந்தம்; அதனால் தன்னுடைய உயிரைப்பறிக்க அவனுக்குச் சுதந்திரமில்லை என்றும்போதிக்கப்படுகின்றான். ஆகவேஎண்ணிறந்த ஆடவர்களும், பெண்மணிகளும், வாலிபர்களும், வயோதிபர்களும் "வல்ல குருநாதன் எம்மைவருத்துவது கொல்லவல்ல, பொல்லாக்குணம்போக்க"என்ற பொன்மொழியைப் பசுமரத்தாணிபோல் மனதிற்பதித்துக் கடவுளில் திடவிசுவாசங்கொண்டவர்களாய், இணையற்ற அவரது இரக்கத்திலும், பராமரிக்கையிலும் அணைகடந்தநம்பிக்கை கொண்டவர்களாய்த் தங்களுக்குண்டாகின்ற துன்பதுயரங்களிலும், கஷ்டநஷ்டங்களிலும் மனஞ்சோராது தேவதிருவுளத்திற்கமைந்து எல்லாவற்றையும் பொறுமையாக அநுபவித்துப் புண்ணியசம்பாத்தியமும்,பாவப்பரிகாரமும்செய்துகொள்ளுகின்றார்கள்.

இந்தஅடிப்படையான சத்தியம் மக்களின்—விசேஷமாக வாலிபர்களின் இருதயங்களிலே ஆழமாகவேரூன்றியிருக்குமிடத்து,என்னதுன்பந்தான்,என்ன துயரந்தான், என்ன கஷ்டந்தான் மலைபோலவந்தபோதிலும் அவர்கள் கலங்கவேமாட்டார்கள். ஆனால், அவற்றைப் பொறுமையோடு சகிப்பதாகிய வீரதியாகத்தில் பின்னிற்கவேமாட்டார்கள். ஆனால், இந்தச் சத்தியஉணர்ச்சி இக்காலத்திலே மானிடஇதயங்களில் தளர்ச்சியடைந்து, படிப்படியாக அழிந்துகொண்டுவருவதுதான் தற்கொலைகள் அதிகரித்துவர முக்கியகாரணமாகும்.

நமதுஸ்ரீலங்காவிலேகம்யூனிஸ்தர்கள் கடவுளைஎதிர்த்தும், சமயத்தைஇழித்தும், சமயபக்தர்களை விரோதித்தும் இன்னுமே நாஸ்திகப்பிரசாரத்தில் இறங்கவில்லையென்று சிலர் சொல்லலாம். ஆனால், அவர்களின் செல்வாக்கு எமதுநாட்டுவாலிபர்களுக்குச் சந்தேகமறவே பெருந்தீங்கு விளைக்கின்றது. அதனால்நாஸ்திகபோதகமும்,கடவுள்இல்லையென்ற நாஸ்திகபிரசாரமும் விசேஷமாய்ப் பட்டினங்களில் அவர்களைப் பின்பற்றுவாரிடையே-விசேஷமாக வாலிபரிடையே பேராபத்துகளை உண்டுபண்ணுகிறதென்று சொல்லவேண்டியதில்லை. அதனால் அரசாங்கத்தின் மூலமாகவும்,பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வானொலிகள் மூலமாகவும் பிரசாரவேலைநடத்தி மக்களின் ஆத்மீகவாழ்வைப் பாதுகாத்து,உலகமேசதமென்றமாக்ஸிய லோகாயதத்திலிருந்து அவர்களைக் காத்துவைக்கச் சமயதலைவர்களும் சமயபக்தர்களும் முன்வந்து அயராது தொண்டாற்றுவது அன்னார் மேற்சுமந்த [illegible]

## சுதேசவர்த்தமானம்

### சென் பேர்ணுட் குருமடம்

கொழும்பிலுள்ள சென்பேர்ணுட் குருமடத்தின் போசிரியர்களில்ஒருவராகச் சமீபத்திலே ரோமாபுரியில் விசேஷ வேதசாஸ்திரங்கள் கற்றுப் பட்டதாரியாகத் திரும்பியவரான வண. ஸ்றனிஸ்லாஸ் பேர்ணன்டோ சுவாமியவர்கள்நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். இவர் மொறட்டுவாவிலுள்ள சென்செபஸ்ரியன் கல்லூரியில் கல்விபயின்று சிலகாலம் கொழும்பிலுள்ள றெஜிஸ்ருர்ஜெனறலின் காரியாலயத்தில் உத்தியோகம்வகித்திருந்து பின்னர் குருத்துவ அந்தஸ்தில் பிரவேசித்தார்.

### சென்சேவியர் கல்லூரி

மன்னாரிலுள்ள சென்சேவியர் கல்லூரியைச் சென்றஆவணிமாதம் 28-ந் திகதிமுதல் அர்ச். டிலாசால் அருளப்பரது கிறிஸ்தியன்சபை பிறதர்மார் பொறுப்பேற்று நடத்திவருகின்றனர். கல்லூரிப்புதியஅதிபரான சங். பிறதர் சீசர், பி.ஏ. (லண்டன்)அவர்கள் தமது சபையைச்சேர்ந்த உடன்பிறதர்மார் மூவருடனும், ஏனைய ஆசிரியர்களுடனும் அதனை நடத்திவருகின்றார்.

### இடைக்கால சுப்பிறீங்கோடு

யாழ்ப்பாணத்திலே வருகிறஐப்பசிமாசம் 1-ந்திகதி ஓர் இடைக்கால சுப்பிறீங்கோடு ஆரம்பமாகி நடந்தேறவிருக்கிறது. இதிலே பூநகரிக் கொலைவழக்கு முதலாவதாகவிசாரணை செய்யப்படும். அத்தோடு வேறுவழக்குகளும் விசாரணைக்கு வரும்போல் இருக்கிறது. சங். சென்கிளேயர் சுவான் நீதியரசர் விசாரணைநடத்தவிருக்கின்றார்.

### கவர்னர்-ஜெனறலின் விஜயம்

கவர்னர்-ஜெனறலாகிய சோல்பறி பிரபு வருகிற கார்த்திகை மாதம் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்யவிருக்கிறாரென அறிகின்றோம். இவர் அம்மாசம் 4-ந்திகதி இங்குவந்துசேர்ந்து 9-ந்திகதிவரையில் இங்கு தங்கியிருப்பார்.

### நகராசங்க தேர்தல்

யாழ்ப்பாணநகராசங்க அங்கத்தவர்களைப் புதிதாகத்தெரிவுசெய்யும் அடுத்ததேர்தல் வருகிற மார்கழி மாசம் நடைபெறவிருக்கிறது. அபேட்சகர்கள் தங்கள்நியமன பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டியதினம்கார்த்திகை மாதம் 2-ந்திகதியெனக் குறிக்கப்பட்டிருக்கிறது. எல்லாவட்டாரங்களிலும் தேர்தல்ஒரேநாளிலே, அதாவது மார்கழிமாதம் 1-ந்திகதி சனிக்கிழமை நடந்தேறுமென எதிர்பார்க்கப்படுகிறது. சிலவட்டாரங்களிலேஅபேட்சகர்கள் வாக்காளர்களைச் சந்தித்து மும்முரமாகவேலைசெய்யத் தொடங்கியிருக்கிறார்கள். தாம்நகரசங்க அரசியலிலிருந்து இளைப்பாறப்போவதாக மேயர் சி. பொன்னம்பலம் அவர்கள் பகிரங்ககூட்டம்ஒன்றில் தெரிவித்திருக்கின்றார். இவர் யாழ்ப்பாணப்பட்டின சங்கத்தில் ஆறுவருடம் தலைவராகவும், நகரசங்கத்தில் இருவருடம் மேயராயும் இருந்திருக்கிறார்.

### உத்தியோகநியமனம்

திரு. எச். எல். சி. கொன்ஸ்ரன்ரைன் அவர்கள் தந்தி—தபால்பகுதியிலே தந்திப்போக்குவரத்து இன்ஸ்பெக்றராக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். இவர் நம்பட்டணவாசரான திரு. பி. ஜே. கொன்ஸ்ரன்ரைன் அவர்களின் இரண்டாவது புதல்வராவர்.

### தண்ணீர்க்கஷ்டநிவாரணம்

யாழ்ப்பாணத் தீவுப்பகுதியிலே தண்ணீர்ப்பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்குக் கஷ்டநிவாரணம் அளிப்பதற்கென அரசாங்க சமூகசேவைப் பகுதியாலே சென்ற ஆவணிமுதல் மூன்று மாதங்களுக்[illegible] ஏறக்குறைய ஆறுலட்சம் ரூபாசெலவிடப்படவிருக்கிறது. இதில் மூன்றுலட்சம்ரூபாவிற்கு மேற்பட்ட தொகை கமச்செய்கைக் கடன்களாக உதவப்படும். ஆளுக்குப் 10 ரூபா வீதமும், குடும்பம்ஒன்றுக்கு 20 ரூபாவுக்கு மேற்படாமலும் மாதவீதம் பணமாக உபகரிக்கப்படும். அதாவது மூன்றுமாதங்களிலும் ஒவ்வோர் குடும்பமும் 60 ரூபா பெற்றுக்கொள்ளும். மாடுகளுக்கு வைக்கோலுக்கென இரண்டரைலட்சம்ரூபா செலவிடப்படும். அவசியம்தேவைப்படுவோரின் மாடுஒவ்வொன்றிற்கும் மாதவீதம் இரண்டுஅந்தர் வைக்கோல் கொடுக்கப்படும்.

### வவுனியாப் பிரதிநிதி

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையிலே வவுனியாப் பிரதிநிதியாய் இருந்துவந்த திரு. சி. சுந்தரலிங்கம்அவர்கள் மூன்று மாதகாலம் சபைக்கூட்டத்துக்கு சமுகமளிக்காதகாரணமாக அவர் வகித்திருந்தஸ்தானம் இன்று காலியாகின்றது. யாழ்ப்பாணத்திலே சென்றஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அகில—இலங்கைக் காங்கிரஸ்நிர்வாகக் கமிற்றிக்கூட்டம்ஒன்றில் செய்யப்பட்டுள்ள தீர்மானப்படி அந்தஸ்தானத்துக்குக் காங்கிரஸ் அபேட்சகர் ஒருவர் போட்டியிடவிருக்கின்றார். வவுனியாவிலுள்ள ஓர் பிரக்கிராசியாரே இந்த அபேட்சகரெனத் தெரியவருகிறது.

### வித்தியாபகுதி மாற்றம்

உதவிவித்தியாதலைவரான திரு. சி. ரி. லோறேஜ் அவர்கள் பாடசாலைகளின் பிரதமவித்தியாதரிசியாகவும், உதவிப்பணம்பெறுகின்ற பாடசாலைகளின் வித்தியாஅதிகாரியான திரு. எஸ். பி. சற்குணம் அவர்கள் அப்பாடசாலைகளின் ஐக்கிங் வித்தியாதலைவராகவும்நியமனம்பெற்றுள்ளனரெனத் தெரியவருகிறது.

### இராஜதம்பதிகளின் விஜயம்

மாட்சிமைதங்கிய ஜோர்ஜ் அரசரும், தேவியாரும் இலங்கைக்கு விஜயஞ்செய்யவும், கொழும்புப் பொருட்காட்சி நடைபெறவும் இன்னும் ஐந்துமாதங்கள் இருக்கும்போதே கொழும்பிலுள்ள பிரதானஹொட்டல்களிலுள்ள இடவசதிகளெல்லாம் தரிசகர்களாலே வாடகைக்கு அமர்த்தப்பட்டுவிட்டன. அரசதம்பதிகளின் விஜயத்தின்போது பிரித்தானி, இந்தியா, பாகிஸ்தான், பர்மா, மலாயா, மற்றும் தென்கிழக்கு ஆசியநாடுகளிலிருந்து பெருந்தொகையான தரிசகர்கள் இலங்கைக்கு வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

### நீதிஸ்தலத்தில் அடித்தவன்

மாத்தறைநீதிஸ்தலத்திலே கல்யாணஞ்செய்த ஓர்வாலிபனான யு. பிறேமதாசஎன்பவன் தன்மனைவிக்கு மாதம் ஒன்றுக்குப் 15 ரூபாவீதம் தாபரிப்புப்பணம் கட்டவேண்டுமெனச் சென்ற 11-ந்திகதி தீர்ப்பிடப்பட்டான். இத்தீர்ப்பைக்கேட்டுக்கொண்டு அவன்வெளிகொண்டதும் தன்மனைவியைக் கையால் வாருகப்புடைத்துவிட்டு ஓட்டமெடுக்கத் தொடங்கினான். அப்போது நீதிஸ்தலச் சார்ஜன் ஓடிச்சென்று அவனைக்கைதுசெய்துவிட்டான். இவன்பிந்த அங்குள்ள உதவி டிஸ்திறிக்கோட்டில் வழக்குத் தொடரப்பட்டுத் தான் குற்றவாளியென்று ஒப்புக்கொண்டதின்பேரில் 25ரூபா அபராதம் விதிக்கப்பட்டான்.

## THE JAFFNA CATHOLIC CLUB

The Annual General meeting of the above club shall take place on Sunday the **23rd September** in the club hall, at **10 a.m.** Members, friends and well-wishers are all cordially invited.

**Very Rev. Fr. T. A. J. Mathuranayagam,**
*President.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கோணம்

### சேர்வு இடாப்பும் வரவு இடப்பும்

பாடசாலைகளிலுள்ள சேர்வு இடாப்புக்களும் வரவு இடாப்புக்களும்.

(அ) பாடசாலை ஒழுங்குச் சட்டத்திற்கொடுபட்ட விதிகளுக்கமைய வைத்திருக்கப்படவில்லையென்றும்,

(ஆ) அவற்றிலிருந்து விபரங்களைப் பெறும் நோக்கத்திற்காகப் போதியளவு காலத்துக்குப் பாதுகாத்து வைத்திருக்கப்படவில்லையென்றும்,

அறிகிறேன்.

2. ஆகையால், கீழே கொடுத்தவண்ணம் இதன்பின்னர் நீர் ஒழுக வேண்டுமென அறிக :—

(அ) சேர்வு இடாப்புக்களிலும் வரவு இடாப்புக்களிலும் இட வேண்டிய சகல விபரங்களையும் பூர்த்தியாய் இடவேண்டும். எத்திகதியிலும் அவற்றைப் பார்த்தால், அத்திகதி வரை அவை பூரணமானவையாயிருத்தல்வேண்டும்.

(ஆ) இவ்விடாப்புக்களைச் சாமான் பதிவுப் புத்தகத்திற் குறிக்க வேணடும்.

(இ) இவ்விடாப்புக்களைக் குறைந்த பட்சம் இருபதுவருடங்களுக்குப் பாடசாலையிற் பாதுகாத்து வைத்திருக்கவேண்டும்.

3. சேர்வு இடாப்பின் 11-ம் கூட்டை விசேஷ கவனத்துடன் நிரப்பவேண்டும். அதிற்கொடுபடும் விபரங்கள் சரியானவையாயிருத்தல் வேண்டும்; ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில், ஒவ்வொரு பிள்ளை தொடர்பிலும் தலைமைஆசிரியர் முதலெழுத்தொப்பமும் திகதியும் இடவேண்டும்.

எச். டபிள்யு. கேளஸ்,
வித்தியாதிபதி

## பரிபூரணபலன்பெறுக

மார்கழிமாதம் 8-ந்திகதி தேவதாயாரின் அமலோற்பதிருநாளுக்கு முன்வரும் 12 சனிக்கிழமைகளில் ஒவ்வொருசனிக்கிழமையும் ஒவ்வோர் பரிபூரண பலன் அடையலாம். இவ்வரிய பத்திமுயற்சி இந்தப்புரட்டாசி மாசம் 22-ந்திகதி சனிக்கிழமை ஆரம்பமாகிப் 12-ம்சனிக்கிழமையாகிய மார்கழிமாதம் 8-ந்திகதி சனியன்று முடிவடையும். இப்பலன்களை அடையப் பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.

1. நல்லபாவசங்கீர்த்தனஞ் செய்தல்.
2. திவ்வியநன்மை பெறுதல்.
3. மாதாவின் அமலோற்பவத்திற்குச் செய்யப்படும்நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாகச் சிலசெபங்களோ அன்றேல் தியானமோசெய்தல்.
4. அர்ச். பாப்பானவரின் கருத்துக்காகவேண்டிக் கொள்ளுதல்.

(10-ம்பத்திநாதர், 1908-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 26-ம் திகதி)

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச். பிலோமினம்மாளிடம்யான் மன்றுடிக்கொண்டபடி என்னுடையவருத்தம் நீங்கிச் சுகமாகிவிட்டதினுல் நேர்த்திப்பிரகாரம் பிரசுரஞ்செய்கிறேன்.

இளவாலை A. S.

## அர்ச். இசிதோர் திருநாள்

கமக்காரரின் பாதுகாவலரான அர்ச். இசிதோர் திருநாள் வழமைபோல் மூருங்கன் இறீஸ்துராசா கோவிலில் 30-9-51-ம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்படும்.

அர்ச். இசிதோரின் பக்தர்கள் தங்கள் நன்றியைக்காட்டுவார்களாக.

29-9-51 மாலை வேஸ்பர் பாடப்படும்.
30-9-51 காலை திவ்வியபாடற்பூசையும், சுற்றுப்பிரகாரமும்.

## ஓர் வேண்டுகோள்

நிகழும் புரட்டாசிமாதம் 25-ந்திகதி செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணம் பரிசுத்தஅடைக்கலமாதாவின் ஆலயத்தில், லோ. விகோறியாகிய எனது தந்தையர் வ. லோறன்ஸ்பிள்ளை தம்புவின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேற்றப்படும். அத்தினத்தில் அந்தப்பூசைக்கு அவரின் இனத்தவர்களும் சிநேகிதர்களும் தயவுசெய்து சமுகமளித்து ஆத்துமஇளைப்பாற்றிக்காக மன்றாடும்படி வினயமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேவன் அவருடைய ஆத்துமத்துக்கு நல்இளைப்பாற்றியை அளிப்பாராக.

லோ. விகோறி

"St. Jude"
4-ம் நம்பர் தபால்கந்தோர்றோட்
நுகேகொட

## செபமாலையும் சுவிசேஷமும்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பெத்லகேமே, யூதாவின்காணியே யூதாவின்சிரேஷ்ட நகரங்களில நீ அற்பமேனும்சிறிதல்ல. ஏனெனில் எனது இஸ்ராயேல் சனத்தை ஆளுந்தலைவர் உன்னிடமிருந்து வெளிப்படுவார்" என்பதாம். அப்போது ஏரோதரசன் சோதிடசாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து அவர்களுக்கு நட்சத்திரந்தோன்றின காலத்தைப்பற்றி ஜாக்கிரதையாய் விசாரித்துஅறிந்தான். பிறகு அவர்களைப் பெத்லகேம் ஊருக்கு அனுப்பி, நீங்கள் போய்ப் பிள்ளையைப்பற்றி ஜாக்கிரதையாய் விசாரியுங்கள். அவரை நீங்கள் கண்டபின் நானும்வந்து அவரை ஆராதிக்கும்படி எனக்கு அறிவியுங்கள் என்றான். அரசன் சொன்னதை அவர்கள்கேட்டபின் புறப்பட்டார்கள். அப்போது இதோ கீழ்த்திசையில் அவர்கள் கண்டநட்சத்திரம் பிள்ளையிருந்த இடத்தின்மேல் வந்து நிற்குமட்டும் அவர்களுக்குமுன் சென்றது. அவர்களோவென்றால் நட்சத்திரத்தைப்பார்த்துச் சந்தோஷ மிகுதியால் ஆனந்தங்கொண்டார்கள். பின்பு வீட்டில் பிரவேசித்துப் பாலனை அவர் தாயான மரியம்மாளோடுகண்டு, சாஷ்டாங்கமாகவிழுந்து அவரை ஆராதித்தார்கள். மேலும் தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னும், தூபவர்க்கமும், மீறையும் அவருக்குப் பாதகாணிக்கை வைத்தார்கள். (மத். II. 1-11)

# கனவிலும் - நினைவிலும்

(வாழைக்குட்டி வரைவது)

ஞானப்பிரகாசசுவாமியார் துவிச்சக்கரவண்டியில் இதோ! மருதையினார்மடச் சந்தியை அடைந்துவிட்டார்! என்னநடக்கிறது? என்று முன்னர்வாழைக்குட்டி எழுதியிருந்தது அல்லவா? ஓர்தவமுனிவரை நிகர்த்துத் தமதுவழமையான உத்தண்டத்துடனும், உயரியதோற்றத்துடனும் எதிர்கொண்டுவந்த சுவாமியாரைத் தூரத்திலகண்டதே அவர் விரோதிகள் அறியப்படாதஓர்காரணத்தால் திடீரெனமருண்டனர், வெருண்டனர், மலைத்தனர், திகைத்தனர், மனேபீதிகொண்டனர். சுவாமியார் சந்திவந்துசேரமுன்னரோ ஒருவர்பின் ஒருவராக அங்குமிங்குமாகப்போய் ஒடியொதுங்கினர். அவரைப்போலவே இவையொன்றையும் அறியாத துவிச்சக்கரவண்டியும் சுவாமியாரைச் சுமந்துகொண்டு உடுவில்முகம்நோக்கி இவர்ந்துகொண்டிருந்தது.

* * *

அங்குநடந்ததையெல்லாம் கண்மறைவாகத் தூரத்திலநின்று கவனித்துநின்றார்அல்லவா, அங்குதவங்கிடந்த ஓர்பெரியார். சுவாமியார் சற்றேஎட்டத்தில்சென்றதும் அவர் சட்டெனஎழுந்தார். அங்குமிங்குமாகப் பதுங்கிக்கொண்டு நின்றவர்கள் அண்டை விரைந்துசென்றார். என்ன காரியம்? நீங்கள்காத்துநின்ற சுவாமியார் அதோபோகிறாரே! அவர்சந்தியில் வந்தபோது—அதுவும்தனிப்பட வந்தபோது சும்மாஏன் அவரைவிட்டுவிட்டீர்கள்? நீங்களும் ஒருவீரவான்கள்தான். உம்......அவரிலா உங்கள் கைவரிசையைக் காட்டத்துணிந்தீர்கள்? நீங்களாவது, அந்த ஆளில் கைவைக்கிறதாவது! இனிமேல்மாத்திரம் இந்தமாதிரியான நடப்புக்காட்டாதீர்களென்று அவர்களைவிரட்டியடித்தனர் அப்பெரியார்.

* * *

அந்தச்சாயங்கால வேளையிலே மருதையினார்மடத்து வெளியிலேசுவாமியார் தமதுதுவிச்சக்கரவண்டியில் என்றும்போல் துல்லிபமாகச் சென்றதும், அவர்விரோதிகள் பதுங்கிநின்றதும் வாழைக்குட்டியின் மனத்திரை முன்போலவே ஓர்வேளைவாசகர்களின் மனக்கண்முன்பாகவும் காட்சியளிக்கக் கூடுமாம். ஆ! வாழைக்குட்டி ஓர் சைத்திரிகனுயிருந்தால் அந்தப்படியே அந்தக்காட்சியை அழகாகச்சித்திரித்துத் தனதுகைவண்மையை ஓர்தரம் உலகறியக் காட்டித்தான் வைக்குமாக்கும். பாவம்! அந்தவண்மைதான் அதற்கில்லையே! அந்தநாளிலே பீற்றர்மாஸ்றர், தம்பிமுத்துமேஸ்திரியார் முதலாம்சைத்திரியர்கள் மையோடு மையாகக்கலந்து தீட்டியசித்திரங்களை அதுகண்ணுற் பார்த்துப்பார்த்து மனதாற் சித்திரித்ததேயல்லாது, கையாற் சித்திரிக்க அதற்குக் கையேவரவில்லையாம்.

* * *

எமதுமுகக்கண்ணைவிட்டு அகன்றபோதிலும் அகக்கண்ணைவிட்டுஅகலாத—உள்ளநாள்மட்டுமே உள்ளபடியே அகலமுடியாத சுவாமியவர்கள் இன்றுவரை—இல்லை, இல்லை, இந்தஆண்டுமார்கழிவரை சீவந்தராக இருந்திருப்பாராஞல்...... அப்பால் எழுத வாழைக்குட்டிக்குக் கைவருகுதில்லையே. அதைப்பற்றி நினைக்கும் போதே பெரும்மனவருத்தமாய் இருக்குதே. எனனசெய்கிறது? என்னவோ அதுகொடுத்துவைக்க வில்லையாக்கும். ஆயின் அதைப்பற்றிஎன்றால், எதைப்பற்றிஎன்று ஒரு கேள்விபிறக்கிறதே. சரி, வாழைக்குட்டிதான் அதைக்கேட்கிறது. விருப்பமாஞல் எவராவது விடையளிக்கலாம். ஆஞல், இதற்குப் போட்டியோ, பரிசிலோ யாதொன்றுமில்லை.

அன்றுகாலை திருநெல்வேலி, அர்ச். சவேரியார்கோவில் என்றுமேயில்லாத சோபிதகாட்சியாயிருந்தது. பக்தர் குழாம் பெருந்திரளாகக் கூடியிருந்தது. அவ்வேளை வண. பி. நீக்கிலாஸ் சுவாமியார் செய்தபிரசங்கம் வடிதங்கமாயிருந்தது. அனைவர்முகத்திலும் ஆனந்தவெள்ளம் அலைமோதிக்கொண்டிருந்தது. ஊருகின்ற ஓர்சிற்றெறும்புபோல் வாழைக்குட்டியும் அங்குஒருபக்கமாக அமர்ந்து இமைகொட்டாது எல்லாவற்றையும் பார்த்துப்பார்த்துக் கண்பூரித்துப்போயிருந்தது. இந்தமட்டிலே வாழைக்குட்டியின்எழுத்தில் உட்புமில்லை, புளியுமில்லை, உறைப்புமில்லை, இனிப்புமில்லையென்று ஆராவது எண்ணவுங்கூடுமாம். சொல்லவுங்கூடுமாம்.

* * *

அன்றுசாயந்தரம் திருநெல்வேலியிலிருந்து கார்களிலே பெரியஊர்வலம். யாழ்ப்பாணமுற்றவெளியில் ஒரேசனசமுத்திரம். அங்கிருந்து சம்பத்திரிசியார்கல்லூரி மண்டபம்வரையிலே பெருந்தெருநீளம் ஒரேசிங்காரமும், தீபாலங்காரமும். இருவெண்பரிகளில் போர்வீரர்களைப்போல் இருவர் காம்பீரமாகமுன்சென்றனர். அவர்களைத் தொடர்ந்து பதினயிரக்கணக்கானோர் அணிவகுத்துச்சென்றனர். இவர்கள் மத்தியிலே பலபிரமுகர்கள்புடைசூழத் தாரகைகள்மத்தியில் ஓர்பூரணமதியம்போல எழுந்தருளினார் அந்தக்குரவர் திலகம், குருத்துவவெள்ளி யூபிலி விழாநாயகம் வண. சுவாமி ஞானப்பிரகாசர். அழகியமலர்மாலைகள் அவரது மணிமார்பில் தவழ்ந்து நறுமணங் கமழ்ந்தன. மக்களின் ஆனந்தக்கூச்சல்கள் வானைப்பிழந்தன. வாத்தியங்கள் ஜாம்,ஜாம்என இன்னிசையாய் முழங்கின.

* * *

யாழ்ப்பாணத்திலேயே பென்னம்பெரிய சம்பத்திரிசியார் கல்லூரிமண்டபம்—வாழைக்குட்டி சும்மாசொல்லுகிறதென்று நினைக்கவேண்டாம—அன்று மாலை மிகச் சின்னஞ்சிறியதொன்றாய்க் காணப்பட்டதிலிருந்து யாழ்ப்பாணக்குடாநாட்டின் நாலுதிக்குகளிலுமிருந்து அங்குவந்துகூடிய மக்களின்தொகையை ஒருவாறு மட்டிட்டுக்கொள்ளலாம். இன்பத்தேன்பாயும் இனியகீதங்கள் ஓர்பால். என்பையுமே உருக்கவல்ல பூபிலி வாழ்த்துப்பத்திரம் மறுபால். அன்பின் தட்சணை இன்னேர்பால். பொன்மழைபொழிந்தவாறாய்ச் சொற்பொழிவுகள் பின்னேர்பால். பத்திரிசியார்கல்லூரி மண்டபம் எத்தனையோ பெரியவிழாக் கொண்டாட்டங்களை இதுகாலவரை கண்டிருக்கிறதாம். அவற்றிலே, இற்றைக்கு 25வருடங்களின்முன் வண. ஞானப்பிரகாச சுவாமிகளது குருத்துவவெள்ளியூபிலி விழாவின்போது யாழ்ப்பாணக் கத்தோலிக்க மக்கள் அவர்மட்டிலே தமக்குள்ள மிக்கான அன்பையும்,மேலான நன்றியறிதலையும் பகிரங்கமாகக் காண்பித்துநடத்திய மகத்தானகொண்டாட்டமும் ஒன்றாகுமாம். ஆ! சுவாமியவர்கள் அடுத்த மார்கழி 1-ந்திகதிவரையில் உயிர்வாழ்ந்திருப்பாராஞல்......

அவரது குருத்துவ செம்பொன் யூபிலிவிழாவையும் ஒருகால் வாழைக்குட்டி தனது கண்குளிரக்கண்டு, மனங்குளிரக்கண்டு, குதூகலமாகக் கொண்டாடியிருக்குமே! இதைவாசித்தும் அவருடைய ஞானமக்களும், ஏனைய அபிமானிகளும் யாது நினைப்பார்கள்? வாய்விட்டு ஏதுசொல்வார்கள்? என்று வாழைக்குட்டி ஒரு சோதிடஞ்சொல்லப்போகிறதாம். அதாவது, ஐயோ! எங்கள் பெரியசுவாமியார் பொறுத்ததோடு பொறுத்து இன்னும்நாலுவருடம் சீவனேடிருந்தாரில்லையே! ......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## சான்பிரான்சீஸ்கோ மகாநாடு

“இனிமேல் நம்மிடை வெற்றி பெற்றவரோ, வீழ்ச்சியுற்றவரோ இருக்கக்கூடாது; சமாதான பங்காளித்துவத்தில் அனைவரும் சமமாகவே இருக்கவேண்டும்.” என்று ஜனாதிபதி ட்றூமன் உலகிலுள்ள தேசங்களுக்கெல்லாம் அறிவிக்கிறார். யப்பானிய சமாதானஉடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்காகக் கூடியமகாநாட்டில் அவர் இவ்வாறுபேசினார். மேலும் அவர் கூறியதாவது:

“இம்மகாநாட்டில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்குமநாடுகள் ஆறு ஆண்டுகளுக்குமுன் கொடூரமான ஓர்யுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. இதே நாடுகளும், வேறுசிலநாடுகளும் இதே மண்டபத்தில் ஒன்றுகூடி நிரந்தர சமாதானத்திற்கு முதல்அத்தியாவசியமான நடவடிக்கையாக ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்தைத் தோற்றுவித்தன.

“நமது முன்னாள்பகைவனைச் சமாதானலட்சியமுடைய நாடுகளிடையே மீண்டும் சமஅந்தஸ்துப் பெறுமாறு செய்வதுதான் சமாதானப்பாதையில் நாம்இன்னொருபடி முன்னேறியிருக்கிறோம் என்பதைக்காட்டும். நமக்கு முன்புள்ள உடன்படிக்கை சமாதானப் பேச்சு மட்டுமல்ல; சமாதானத்திற்காகப் பாடுபடுவதையும்காட்டும். சமாதானத்திற்கு யார் முயற்சிசெய்கிறார்கள் என்பதையும், சமாதானத்தைத் தடுக்க யார்முற்படுகிறார்கள் என்பதையும், யுத்தத்தைநிறுத்திவிட யார் விரும்புகிறார்கள் என்பதையும் இம் மகாநாடு நிரூபிக்கும்.

“தேசங்களிடையே அதிக ஒற்றுமையை வளர்க்கவும், ஒருநாடு பிறநாடுகளை அதிகம் அறிந்துகொள்ளவும் இந்த உடன்படிக்கை சாதனமாக இருக்கவேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன். சமாதானப்பேச்சை ஆரம்பிக்கிறநாம் கெட்டஎண்ணத்தையும், பகைமையையும் விட்டொழிப்போமாக. இனி நம்மிடை வெற்றி பெற்றவரோ, வீழ்ச்சியடைந்தவரோ இருக்கக்கூடாது. சமாதானத்தை நிலைநாட்டுவதில் பங்காளிகளாக இருந்து அனைவரும் சமமாக விளங்குவோமாக.”

## பாதுகாப்பு உடன்பாடு

— வாஷிங்ரன்

அமெரிக்க-பிலிப்பைன் பரஸ்பர பாதுகாப்புஉடன்பாடானது “பசிபிக்கில் பாதுகாப்புக்கும், சமாதானத்திற்கும் உகந்த உறுதியானஏற்பாடாகும்” என்று ஜனாதிபதி ட்றூமன் நம்புகிறார். சமீபத்திலே இந்தஉடன்பாடு கையெழுத்தானவைபவத்தில் அவர் மேலும் சொன்னதாவது: இருநாடுகளும் ஒரேமார்க்கத்திற் சென்று கடந்த காலத்தில் முயன்றதுபோலவே மனிதவர்க்கம் முழுவதினதும் சமாதானத்திற்காக வருங்காலத்திலும் ஒன்றுபட்டு முயலஉத்தேசித்திருக்கின்றனவென்பதை இந்தஉடன்பாடுநிரூபிக்கிறது.” பசிபிக்பிரதேசத்தில் அமெரிக்காமீதோ, பிலிப்பைன்மீதோ தாக்குதல் நடந்தால் இந்தஆக்கிரமிப்புச்செயலானது இருநாடுகளின் பாதுகாப்புக்கும் ஆபத்தாகுமென்று இந்தஉடன்படிக்கையில் இருநாடுகளும் அங்கீகரிப்பதுடன் பொதுஅபாயங்களை அரசியல்திட்ட விதிமுறைகளின்படி கவனிக்கவும் உடன்பட்டிருக்கின்றன.

“இந்தஉடன்பாடு புதிதாகஎதையும் கற்பிக்கவில்லை. ஏற்கெனஉள்ளதையே வெளியிடுகிறது. நமது இருநாடுகளையும் பிணைக்கும் சகோதரத்துவ உறவையே இந்தஉடன்பாடு வெளியிடுகிறது. பிலிப்பைனும் அமெரிக்காவும் அரைநூற்றாண்டாக அமைதியாகவும், பயனுள்ளவிதத்திலும் ஒத்துழைத்துவருவதே இருநாடுகளுக்கும் ஓரேவிதமானலட்சியங்கள் இருக்கின்றனவென்பதற்கும், இருநாடுகளும் ஒரே குறிக்கோளைநோக்கி நடக்கின்றனஎன்பதற்கும் அத்தாட்சியாகும். பூர்வோத்திரத்திலும், அநுபவத்திலும் வேறுபட்ட இருநாடுகள் ஜனநாயகத்திலும், சுதந்திரத்திலும் ஓரேவிதமான நம்பிக்கை கொள்ளும்பட்சத்தில், பொதுநலத்திற்காகச் சேர்ந்து வேலைசெய்யக்கூடுமென்பதை நாம் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம்” என்று ஜனாதிபதி ட்றூமன் கூறினார்.

இந்தவைபவத்தில் கலந்துகொள்ளத் தமதுநாட்டிலிருந்து வாஷிங்ரனுக்குச் சென்றிருந்த பிலிப்பைன ஜனாதிபதி கிறினோ பேசுகையில்: “நமக்கு எந்த நாட்டின்மீதும் ஆக்கிரமிப்பு நோக்கமில்லை. பாதுகாப்புக்காக அமெரிக்காவும், பிலிப்பைனும் சேர்ந்தே நடவடிக்கை எடுக்குமென்பதை இனி ஆக்கிரமிப்பில்இறங்கத் துணிவுகொள்வோருக்கு அறிவிப்பதே நமதுநோக்கம்” என்றார்.

## சோவியற் பொய்ப்பிரசாரம்

ருஷியாவைக் கண்டுள்ள அமெரிக்க தொழிலாளர் அநேகருக்கு உண்மை நிலை தெரிந்திருக்கிறபடியால் அமெரிக்காவில் சோவியற் பொய்ப்பிரசாரம் பலிப்பதில்லை. விஸ்கான்சினைச் சேர்ந்த கினோஷாநகரிலுள்ள நாஷ்-கிளினேற்றர் தொழிற்சாலையில் சாயம் தயாரிக்கும்வேலையில் ஈடுபட்டிருக்கும் ஜோன்ஒலெப் ருஷியாவைநன்றாய் அறிவார். இவர் எஸ்தோனியாவில் பிறந்தவர். இளம்வயதிலே இவர் அமெரிக்காசென்றிருந்தவர். ஆனால், தொழிலாளர் ஆட்சிபுரியும் நாடொன்றைச் சிருஷ்டிக்க உதவிபுரியும்படி ஸ்ராலின் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கி இவர் ருஷியாசென்றார்.

அங்கே ஜோனுக்கு ஒரேயொரு அறைதான் குடியிருக்கக் கொடுக்கப்பட்டது. அதில் கணஅடுப்பு இல்லை. ஆனாலும்இவர் அதிருப்தியடையவில்லை பாட்டாளிகள் அமைதியுடனும், சுபிட்சமாகவும் வாழக்கூடிய தேசமொன்றைஅமைக்கத் தான்உதவிபுரிவதாக எண்ணினார். ஆனால், இவர் ருஷியாவில் வர்க்கமற்ற சமுதாயம் இருப்பதற்குப்பதில் தொழிலாளரில் 17 வரிசைகள் இருப்பதைக்கண்டார். இவரதுபிரமைநீங்கியது. கம்யூனிஸ்த கட்சித்தலைவர்கள் மன்னர்களைப்போல் வாழ்ந்தார்கள். இயந்திரத்தொழிலாளரான ஜோன் ஏழாவதுவரிசையிலிருந்தார். வாரத்தில்ஒருமுறை சிறிது இறைச்சிவாங்க வேண்டுமானாலும் ஜோனும், மற்றொருதொழிலாளரும் தங்கள் சம்பளங்களை ஒன்றாகச் சேர்த்தே ஆகவேண்டியிருந்தது. மற்றப்படி அவர்களுக்கு உருளைக்கிழங்குச் சாறும், கறுப்பு றொட்டியுமேகிடைக்கும். வேலைநிலைமைகளைப்பற்றித் தொழிற்சங்க நிர்வாகிகளுக்குக் கூறப்படும்புகார்கள் தள்ளப்பட்டுவந்தன. அதிகபண்டங்களை உற்பத்திசெய்யும்படியே வற்புறுத்தப்பட்டார்கள்.

நோய்வாய்ப் பட்டிருந்த போதுகூட ‘பவனிக’வில் சேர்ந்துசெல்லும்படி ஜோன் நிர்ப்பந்தப்படுத்தப் பட்டார். தொழிலாளர்களில் ஐந்துபேருக்கு ஒருவர்வீதம் ஒற்றனைஇருப்பதையும் இவர்கண்டார். அமெரிக்காவில் ஜனநாயகஅரசியலை இவர்கண்டவர். அங்குஎவருமே தேர்தலுக்குஅபேட்சகராக நிற்கக்கூடும்என்பதை அறிந்த இவர் சோவியற்தேர்தல்களின் பித்தலாட்டத்தையும் கண்டார். ருஷியாவில் ஒருவர்பெயரே வாக்குச்சீட்டில் காணப்பட்டது. இவற்றையெல்லாம் அருவருப்புஅடைந்த ஜோன் எஸ்தோனியாவிலுள்ள தமதுஉறவினர்களைக் காண அநுமதிகேட்டு, ருஷியஅதிகாரிகளை ஏமாற்றிவிட்டு அமெரிக்காவுக்குஓடிச்சென்றுவிட்டார். இப்பொழுது, கம்யூனிஸ்தஅநுதாபிகள் ஜோனிடமும் இவர்வேலைசெய்யும் தொழிற்சாலையிலும் ஒருபிரசாரமும் செய்வதில்லை. இவருக்கும், இவரது சகாக்களுக்கும் உண்மைநன்றாகத் தெரிந்துவிட்டது அல்லவா?

## மாந்தைப்பதியின் மறுமலர்ச்சி

—:—

(நாட்டுத்தூதன்)

பூர்வீகலங்காவின் பெரியநகர்களில் ஒன்றாக மாந்தைநகரமும் விளங்கிற்று என்பது இதிகாச மூலமாகச் சகலரும்நன்கறிந்த உண்மையாகும். இத்தகைய மாண்புமிக்க மாந்தைப்பதியிலே கி. பி. 1519—1561 ஆண்டுகளுக் கிடைப்பட்ட காலத்திலே சத்தியதிருமறையும் அதிகம் வேரூன்றித் தழைத்துச் செழித்துச் சிறப்பெய்தலாயிற்று. அப்போது போர்த்துக்கேயரின் உதவியோடு இங்குவாழ்ந்திருந்த கத்தோலிக்கமக்கள் பரிசுத்த செபமாலைமாதாபேரால் அலங்காரமிக்க ஓர் பிரமாண்டமான ஆலயத்தை நிருமாணித்து மாதாபக்தியில் இளம்மதிபோல் வளர்ந்துகொண்டிருந்தார்கள். அவ்வாறாக, இப்பதியின் சத்தியவேதவளத்தைக் காணச்சகியாதவன்போல் நரகசாத்தான் ஒல்லாந்தருள் புகுந்து எம்திருமறையை அழித்துவிட முனைவந்தான். அப்புனிதஆலயத்தைத் தரைமட்டமாக்கிவிடவும் முனைந்தான். அவனது முயற்சியால் ஆலயம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டதெனினும் மாதா பக்தர்களின் வேதவிசுவாசம் கடுகளவேனுங்குறையாது இன்னும்பன்மடங்கு அதிகரித்துச் சுடர்விட்டுப் பிரகாசிக்கலாயிற்று. அதனால் ஒருதொகையான கத்தோலிக்கர் திரண்டு மகிமைபொருந்திய மாதா சுரூபத்தைக் கண்டியரசனின் ஆளுகைக்குட்பட்டிருந்த மருதமடுப்பதிக்கு 1760-ம்ஆண்டளவில் எடுத்துச்சென்று அங்கே ஸ்தாபித்து வழிபட்டுவந்தார்கள்.

இப்பெரும்மாறுதலோடு மாந்தையும் தனது மகிமைப்பிரதாபத்தை இழந்து தேய்பிறைபோல் குன்றுவதாயிற்று. செழிப்புற்றுவிளங்கிய செந்நெற்களனிகள் பற்றைக்காடுகளால் ஆட்சிகொள்ளப்படலாயின. மாந்தரும் அருகிமறையலாயினர். நகரம் நாடாயிற்று. நாடு காடாயிற்று. ஓ! மாந்தைமாநகரே! தற்போது நீ இருக்கும் நிலைமைதான் என்னே? இதையிட்டு யாராவது, எப்போதாவது, சிந்தித்ததுண்டா? விசுவாசதுடிப்புக் கொண்டதுண்டா? வேதசாட்சிகளின் குருதி சுவறப்பெற்ற நாடாகிய மாதோட்ட—மன்னார்க் கத்தோலிக்கமக்களும், இங்கிருந்த குருப்பிரசாதிகளும் மடுமாதாவின் திருச்சுரூபம் 1948-ம்ஆண்டு திருப்பவனிசெய்தபோது இதை நினைந்தனர். தெய்வ அன்னையர்க்குத் திருக்கெபி ஒன்று அமைக்க முனைந்தனர். ஆர்வத்தோடு திருப்பணியைத் தொடக்கிநடத்தினர். அப்போதிருந்த அடம்பன் கட்டளைக்குரவர் வண. ஜோண் சிங்கராயர் சுவாமியவர்கள். இதனைத்தொடர்ந்து மக்களுக்குண்டான அபிமானம் வளர்ச்சியுற்றது. மங்கிக்கிடந்த மாந்தையும் மறுமலர்ச்சிகொள்ள ஆரம்பித்தது. மண்திடராய்க்கிடந்த மாதாகோவிற்தலமும் புதுமணம் வீசத்தொடங்கியது. சென்ற ஆண்டு வைகாசிமாதம் 19-ந் திகதி திருக்கெபித் திறப்புவிழாவின்போது காணப்பட்ட பக்திப்பரவசகாட்சிகள் இன்றுமே எமது உள்ளங்களைக் கவர்ந்து நிற்கின்றன. மேலும் இத்திருப்பதியைப் புராதனநிலைமைக்குக் கொண்டுவரத் தற்சமையம் எமது கட்டளைக்குரவராய் இருந்துவருகின்ற வண. எஸ். வேந்தர்கோன் சுவாமிகளும், இப்பகுதியிலுள்ள ஏனைய குருப்பிரசாதிகளும், மகாவந். எமது மேற்றிராணிஆண்டவரும் மிக்க வாஞ்சையுடையோராய்க் காணப்படுகின்றார்கள். இவர்களுடன் இப்பகுதியில்வாழும் சகலகத்தோலிக்கமக்களும் ஏகோபித்து ஆர்வத்துடன் ஒத்துழைத்து, மாந்தைப்பதியைச் சிறக்கச்செய்து, மாதாவுக்கு மகிமைஉண்டாக்குவது அவர்கள் மேற்சுமத்த பெருங்கடமையாகுமென்க. சுபம்.

## சீயத்திலே படையெடுக்குமா?

சீனாவின் ஆதரவைப்பெற்று இந்தோ-சீனாவிலிருந்து கம்யூனிஸ்தர்கள் தனது நாட்டின்மீது படையெடுக்க விருப்பதையிட்டுச் சீயதேச அரசாங்கம் தனது சனங்களை அதற்குத் தயாராக்கும் இயக்கமொன்றைத் தொடக்கியிருப்பதாக “ஸ்கொட்ஸ்மன்” என்ற பத்திரிகை செய்திவெளியிட்டிருக்கிறது. இந்தோ-சீனாவின் எல்லையிலே பலம்பொருந்திய சீனக்கம்யூனிஸ்த படைகள் திரட்டப்பட்டு வருவதாலே இந்தப்படையெடுப்பு எதிர்பார்க்கப்படுவதாகச் சீயஅரசாங்கத்தின் பிரசித்தஞ்செய்யும்பகுதி சொல்வதாகவும், இதற்கென்று சீனாவிலே யூனன் மாகாணஎல்லையைச் சீனாவின் பிரதான றெயில்வேயுடன் இணைப்பதற்கான ஒழுங்குகள் ஏறக்குறையப் பூர்த்தியாகின்றனவென்றும் அப்பத்திரிகை தெரிவிக்கின்றது.

## ருஷியாவின் எச்சரிக்கை

ஜேர்மனியைத் திரும்பவும் ஆயுதபாணியாக்குகின்றபிரான்சியகொள்கையானது இரண்டாவது உலகயுத்தத்துக்கு மியூனிச்சின் அதேகாலத்தைத் திரும்பவும் கொண்டுவருவதாகச் சோவியற்அரசின் வெளிநாட்டு மந்திரியான அன்ட்றே விஷின்ஸ்கி என்பார் அதனைத்தாக்கி ஓர்அறிவித்தல் விடுத்திருக்கின்றார். ஐரோப்பிய இரும்பையும், நிலக்கரியையும் ஒன்று திரட்டிப்பகிரும் ஷூமன்திட்டத்தையும், ஜேர்மன்படைகளுடன்கூடிய ஐரோப்பியசேனையைஆக்கப் பிரான்சியபிரதமர் பிளெவின்செய்யும் திட்டத்தையும் இந்தஅறிவித்தல் எதிர்த்திருக்கிறது. இரண்டாவது உலகயுத்தத்தை உண்டுபண்ணக் ஹிற்லருக்கு உதவிசெய்த அதேகொள்கை இதுவென்றும், தற்போது பிரான்ஸ், பிரித்தானி, அமெரிக்கஐக்கியதேசம் மூன்றும் அதேபழையபாதையிலேயே நிற்கின்றனவென்றும் சோவியற்வெளிநாட்டுமந்திரி குற்றம்பாரித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹன்ஞ அல்லது கைப்பாசின்பேர்த்தி

தைற்றஸ் உரோமைச் சக்கரவர்த்தியான வெஸ்பாசியனின் புதல்வன். யூதசனத்தை வென்ருன். ஜெருசலேமை அடிப்படுத்திக்கொண்டான். தேவாலயத்தைக் கல்லின்மேல் கல் நிற்கவொட்டாமல் தரைமட்டமாக்கினுன். யூதமாதரில்அநேகர் அடிமைகளாக உரோமைக்குக் கடத்தப்பட்டனர். இவ்வடிமைகள் பெரியபிரபுக்கள் குடும்பத்தினருக்கு விநியோகஞ் செய்யப்பட்டனர். புகழ்பெற்ற 'பிளாவி' குடும்பத்தினரிடம் சில அடிமைகள் போய்ச்சேர்ந்தனர். சக்கரவர்த்தியின்பந்துவான பிளாவியா பிளாற்றில்லாவுக்கும் இஸ்ருயேல் புத்திரிகள் இருவர்கிடைத்தனர்.

அவர்களுள் சலோமிஎன்பாள் வயது முதிர்ந்தவள். உலகில் பலஇடுக்கணகள் அனுபவித்தவள். பகையும், வைராக்கியமும் நிறைந்த உள்ளம் படைத்தவள். மற்றவள் ஹன்ஞ. வாழ்க்கையின்வசந்தம் இன்னும் கடவாதவள். அவளது நடைஉடைபாவனையும், கரியவிழிகளின் கூரிய பார்வையும், களங்கமற்ற குழந்தைப் புன்னகையும் சகலரையும் வசீகரித்தன. அவள் வெகுஅரிதாய்ப் பேசினுள். முறைப்பாடு சொன்னவளல்ல. அவளது அழகியகரங்களோ அவள் உயர்குலத்தில் உதித்தவள் என்பதைப் புலப்படுத்திற்று.

இவ்விருஅடிமைகளும் பிளாவியாவின் இல்லத்தில் சந்தோஷமாகக் காலங்கழித்தார்கள். ஏனெனில், பிளாவியா ஓர்கிறீஸ்தவள். ஹன்ஞ தன்எசமானிக்கு மிகுந்த சாக்கிரதையாகப் பணிவிடைசெய்தாள். அப்பொழுதும் அவள்அதரங்கள் அசைந்தபாடில்லை. அவ்வேளைகளில் பிளாவியா மிகுந்தசாதுரியமாய் நமது இரட்சகரின் சொந்தநாடாம் கலிலேயாவைப் பற்றியும், ஜெருசலேம், பெத்லகேம் முதலிய நகரங்களைப்பற்றியும் விஞவுவதுண்டு.

ஆயினும் ஹன்ஞவைக் கிறீஸ்தவளாக்க அவள்சிறிதும் முயற்சிக்கவில்லை. இந்தவேலையை மேற்கொண்டவள் மற்ருெருஅடிமை. இவள் ஜேர்மனிய தேசத்தினள். கிறீஸ்துவின் ஆர்வமிக்க பக்தை. ஏவுவாரின்றியே இத்தொண்டில் இறங்கினுள். ஓய்வான நேரங்களில் ஹன்ஞவிடம் யேசுவைப் பற்றிப்பேசுவாள். தங்கள்குருக்களாலும், சன்னட்ரீம்என்ற கூட்டத்தினராலும் யேசுஎன்னப்பட்ட ஓர்யூதர் குற்றஞ் சாட்டப்பட்டுக் கொலையுண்டார் என்று கேள்விப்பட்டிருந்தாள் ஹன்ஞ எப்பொழுதோ. இருந்தபோதிலும் அந்தயேசுவின் போதனைகளும், அவரதுசீவியமும் அவளைக் கவர்ந்தன. அந்தயேசு தாவீதின்குமாரன். 'அழுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் ஆறுதல் அடைவார்கள், என்று அவர் மொழிந்திருக்கிருர்அல்லவா? அவர்பட்ட மரணஅவஸ்தையும், அவர் காட்டிக்கொடுக்கப்பட்டதும், அவரின் அகோரபாடுகளும் அவள் மனதை இளக்கின.

ஓர்தினம் அவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் ஹன்ஞவின்முகம் வெளுத்தது. சம்பாஷணையை நிறுத்திவிட்டுஅகன்ருள். பெகா— அந்த ஜேர்மனியஅடிமை— பன்முறையும் முயன்ருள். பயனில்லை. "நான் கிறீஸ்தவளாகமுடியாது. நீ வீணில் சிரமப்படாதே" என்று ஹன்ஞ அவளிடம் கூறிவிட்டுப் பெகாவின் அப்போஸ்தல தொண்டிற்கு முற்றுப்புள்ளி வைத்தாள். அன்றைய தினத்திலிருந்து ஹன்ஞவின் முகபாவத்தில் சோகம் காணப்பட்டது. இவ்விஷயத்தைப் பிளாவியா அறிந்ததும் பெகாவை அழைத்து, அவள் ஹன்ஞமாட்டு மிகுந்த அன்பு காட்டவேண்டுமென்றும், மற்றது நமதுஆண்டவரின் அருளால் ஆகுமென்றும் கூறினுள். பிளாவியாவும் முன்னையிலும் அதிகவாஞ்சையோடு அவளிடம்நடந்துகொண்டாள்.

ஆனுல், மற்றஅடிமையான சலோமிக்கு இதுபொறுக்கவில்லை. ஓர்நாள் சலோமியும், பெகாவும் தோட்டத்தில் மலர்கள் கொய்துகொண்டிருந்தனர். சலோமி சொல்வாள்: "நமதுஎசமானியும், நீயும் ஹன்ஞவிடம் இவ்வளவு அன்பு காட்டுகிறீர்களே; அவள்மட்டும் எந்தக்குலத்தில் உதித்தவள் என்று உங்களுக்குத்தெரிந்தால்?" "குலமா? உனதுகுலம்தானே; எங்கள்ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவின் யூதகுலம்!" சலோமி பரிகாசச்சிரிப்புடன் "ஆம், அதுஉங்களுக்குத் திருப்தியானுல்சரி; ஆனுல், அவள் எதைஉங்களிடம் சொல்லத் துணியமாட்டாளோ அதை நீங்கள்அறிந்தால்...... சிலுவையிலே அறையுண்டவரின் பக்தர்களான உங்களுக்கு அந்தயூதப்பெண்மீது இம்மட்டுஅன்பு ஏற்படாது. அப்போது பெகா ஆச்சரியம்மேலிட்டவளாய்,

"ஆனுல் அது என்ன ?"

"அவள்தாய் கைப்பாசின்மகள்!"

"கைப்பாசின் மகளா !!"

"ஆ! இப்பொழுதுதான் எனக்கு விளங்குகிறது. அவர்மேல் குற்றஞ் சாட்டியதையும், அவருக்கு விரோதமாகக் கூறப்பட்டபொய்ச்சாட்சிகளையும், பெரியகுருக்களின் ஆணைகளையும், அவரதுமரணத்தையும்பற்றி எடுத்துக் கூறியபொழுதெல்லாம் அவள் திடீரென என்னைவிட்டு ஓடிவிட்டாள்.

பிளாவியாவுக்கு இவ்விஷயம் அறிவிக்கப்பட்டது. அவள் ஹன்ஞவை அழைத்துத் தாய்க்குரிய அன்புடன் மதுரமானகுரலில் சொல்வாள்: "ஹன்ஞ! யேசுவைப்பற்றி உன்னிடம் நான் கூறியபொழுது நீ அவரிடம் அன்புசெய்வதுபோல் தோன்றினுய்; ஆனுல், இப்பொழுதோ நான்கிறீஸ்தவளாவது கூடாதகாரியம் என்கிருயே! ஏன்? நீ கைப்பாசின் பேர்த்தியாயிருப்பதுதான் காரணமோ?"

ஹன்ஞ தழுதழுத்தகுரலில் நடுங்கிக்கொண்டு, "அம்மணி, அப்படியானுல் அது உங்களுக்குத் தெரிந்துவிட்டதா? சலோமிதான் சொல்லியிருப்பாள்."

"குழந்தாய்! அதற்கென்ன? இந்த இரகசியமே உன்னை உபாதித்துக் கொண்டிருந்தது; அப்படித்தானே?"

"அம்மா, இதற்காக என்னை வெறுக்கமாட்டீர்களே!"

"ஏன் வெறுக்கவேண்டும்?"

"என் அன்னையின் தந்தைதானே உங்கள்கடவுள் சாகக் காரணமாயிருந்தார்!"

"நாங்கள் எதிரிகளைச் சிநேகித்து அவர்களுக்கு நன்மைசெய்ய வேண்டுமென்று எங்கள்கடவுள் கற்பித்திருக்கிருர். யேசு தமதுமாதிரிகையினுலும் அவ்வாறு காண்பித்திருக்கிருர். நாங்கள் உன்னைவெறுக்கவில்லை. யேசுவும் வெறுக்கமாட்டார். அவர் உன்னை நேசிக்கிருர். உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிருர். பரிசுத்தஞானஸ்நானத்தால் நீ எங்கள் சகோதரியாகலாம்."

"ஆ! அப்படியானுல், கைப்பாசின் பேர்த்தியாகிய ஹன்ஞ— அவரால் மரணமடைந்த அந்தக்கடவுளுக்காகச் சீவிக்கமுடியுமா? என்ருள் ஹன்ஞ. அவள்முகமோ புதிய சோபையுற்றுத் துலங்கியது. "ஆம், ஆம் ஹன்ஞ! நீ அவருக்காகவே உயிர்வாழ முடியும்; ஒருவேளை அவருக்காக நீ உயிர்இழக்கவும் நேரிடலாம்; எதிர்காலத்தில் என்னநேரிடுமோ நாம் அறியோம்; யேசுவின் அன்பிற்காக நமக்குமுன் அனந்தம்பேர் உயிர் இழந்திருக்கின்றனர்."

"ஆ! இரத்தத்திற்கு இரத்தம்! இது சாத்தியமாகுமா? அப்படியானுல் எவ்வளவு [illegible]! என்று [illegible] ஹன்ஞ தா[illegible] அவள் [illegible]கள் இறுகமூடியிருந்தன.

டொமிசியன் சக்கரவர்த்தி காலத்தில் வேதகலாபனை கடூரமாய் நடந்துகொண்டிருந்தது. பிளாவி குடும்பத்தினர் இராசவம்சத்தினர் என்றபோதிலும் அவர்களையும் விட்டார்களில்லை. மற்றக் கிறீஸ்துவ அடிமைகளோடு ஹன்ஞவும் கொடிய மிருகங்களுக்கு முன் எறியப்பட்டாள்.

காட்டுவிலங்குகளின்முன் ஹன்ஞ நின்ருள். வெளுத்தமுகம், ஆயினும் வீரம்நிறைந்திருந்தது. மோட்சத்தை அண்ணாந்து "என்எசமானே! நீரே கிறீஸ்து, உயிருள்ள தேவனின் குமாரன்!" எனப்பகர்ந்தாள். மறுகணத்திலே சிங்கம் அவள்மேல்பாய்ந்து ஓர் அடியில் அவளைக்கொன்றுவிட்டது. பெரியகுருவின் பாதகத்தை அதே [illegible] அவரதுபேர்த்தி பரி[illegible]

(ச. போ.)

---

சாட்டி (வேலணை)

# சிந்தாத்திரை மாதா திருநாள்

## 24—9—51

இத்திருநாளுக்கு முந்தியதிருவிழாக்கள் 11-9-51 செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 23-ந்திகதி வேஸ்பருடனும், அடுத்த நாட்காலை பாடற்பூசையுடனும், தேவதாயாரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் திருநாள் முடிவாகும்.

கவனிப்பு :— 1. யாத்திரிகளின் வசதிக்கென இன்னுமோர் மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. யாத்திரிகள் சகலரும் இதே மண்டபத்தில் தங்கிவருவது மிகவும் விரும்பத்தக்கது.

2. கோவில் திருப்பணிநிதிக்கு உதவிசெய்த சகலபேருபகாரிகளுக்காகவும் திருநாளுக்கடுத்தநாள் 25-9-51 செவ்வாய்க்கிழமை ஓர்பாடற்பூசை நிறைவேறும்.

Louis Joseph, O. M. I.

கட்டளைக்குரு

---

## கிராம முன்னேற்றச் சங்கம்

சென்ற 9-9-51 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை வாசிகசாலையில் இச்சங்கம்கூடியது. ஊர்காவற்றுறைப் பாராளுமன்றப் பிரதிநிதி A. L. தம்பிஐயா அவர்கள் கூட்டத்துக்குச் சமுகமளித்தனர். காரியதரிசி தமதுஅறிக்கையிலே கூட்டம் செய்திருப்பதும், செய்யவிருப்பதுமானநன்மைகளை விபரமாக எடுத்துக் கூறினுர். அதன்மேல் தலைவர் வண. பிலிப் பொன்னையா சுவாமியவர்கள் பேசியபோது: வளர்பிறைபோல் கூட்டம்வளர்ந்துவருவது எல்லோருக்குமே சந்தோஷமெனத்தெரிவித்துச்சில பொன்மொழிகளால் யாவருக்கும்உற்சாகமூட்டினர். ஆசிரியர் T. A. F. இராசையா இவ்வூர்வாசிகள் தண்ணீரின்றிப் படுங்கஷ்டங்களைப்பற்றி எடுத்துக்கூறினர்.

அதன்மேல் வண. S. நீக்கிலாப்பிள்ளை சுவாமியவர்கள், ஊர்காவற்றுறையிலே ஐப்பசி, கார்த்திகைமாதங்கள்ளிநெருப்புக்காய்ச்சல் பரவுகிறது; அதைத்தடைபண்ணக் கிராமமுன்னேற்றசங்க அங்கத்தவர்கள் முன்மாதிரியாக ஊசி மருந்து ஏற்றிக்கொள்ளவேண்டும்; இன்னும் கடந்த பலவருடங்களாகப் பாடசாலைப்பிள்ளைகளைப் பரிசோதிக்க அரசாங்கவைத்திய அதிகாரிகள் எவரும்வரவில்லை; அதனுல் பிள்ளைகள் மிகவுங்கஷ்டப்பட்டுத் தங்கள்செலவில் பல்வேறுஇடங்களுக்குச்சென்று சிகிச்சைபெற்றுவருகிருர்கள் என்பனவாகக் கூறினின்ருர்.

அடுத்தபடியாகக் காவலூர்க்கவிஞர் T. G. M. செல்வராஜ் ஊர்காவற்றுறையின் அணிகலமாய்விளங்கும் இயற்கைத்துறைமுகத்தின் சரித்திரத்தை விரிவாக எடுத்துக்காட்டி இவ்வூர்மக்களின் முக்கியதொழில் கடற்தொழிலேஎன்றும், அநேகர்வேலையின்றித்தவிக்கும் இக்காலத்தில் துறைமுகத்தைத்திறந்தால் முட்டின்றி அதிலேஅவர்கள் தங்கள்வாழ்க்கையைஒருவாறுநடத்தமுடியுமென்றும், துறைமுகத்தில் பிரயாணகஷ்டமுண்டென்றும், அதற்குத் தகுந்த யந்திரப்பாதைஒன்று அமைக்கப்படவேண்டுமென்றும்தெரிவித்துக்கொண்டார்.

இளைஞர்சங்கத்தின்சார்பாகத் திரு. S. யோசேப் பேசுகையில், சங்கத்தவருக்கு ஒருவிளையாட்டுமைதானமும், இன்னும் விளையாட்டுக்கருவிகளாகிய உதைபந்து, கரபந்துமுதலானவைகளும் உதவப்படவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். ஈற்றில்பாராளுமன்றப் பிரதிநிதிஎழுந்து, இளைஞர்சங்கம் இருந்துவருவது நலமாகுமாதலால் அதற்குத்தம்மாலான உதவிகள்செய்வதாக வாக்களித்தார். இன்னும் நாம் உண்மையாகவே தண்ணீர்ப்பஞ்சத்தினுல் கஷ்டப்படுகிருேம். சென்றவாரம் இதுவிஷயமாக யான் பிரதமருடன் கலந்து ஆலோசித்தபொழுது அவர்விசேஷஉதவி செய்வதாகத்தெரிவித்தார். தற்போதுசாட்டியில் நாலு ஐந்துகிணறுகள் வெட்டப்படுகின்றன. வெட்டிமுடிந்ததும் இப்போதுகிடைப்பதிலும் ஒருமடங்குகூட விநியோகஞ்செய்யமுடியும். ஊர்காவற்றுறைத் துறைமுகத்தைத்திறக்க என்னுல் ஆகவேண்டிய நடவடிக்கைகள் எடுத்துவருகிறேன். ஊர்காவற்றுறைக்கு சிரந்தர யந்திரப்பாதைஒன்று செய்யப்படுகிறது; அதுவேலைமுடிந்ததும் உடனே அனுப்பிவைக்கப்படும் எனக் கூறலாயினர். ஆசிரியர் K. செல்வராசா கூறிய நன்றித்துதியிலே வண. தலைவர்சுவாமியவர்கள் சிரமத்தைப் பாராது பிறர்நன்மைகருதியும், நாட்டின்முன்னேற்றம் கருதியும்உழைத்துவருவது எல்லோருக்குமே ஊக்கந்தரக்கூடிய செயலெனப் பாராட்டிச் சிலபேசியதும் கூட்டம்இனிதுகலைந்தது.

S. லினஸ்

---

—ரோமாபுரியிலுள்ள பாப்பரசரின் வடஅமெரிக்க குருமடத்திலே வேதசாஸ்திரம் படித்துவருகின்ற 116 மாணவர்களிலும் 31 பேர் அமெரிக்க. ஐக்கியதேச பட்டாளங்களிலே முன்னர் யுத்தசேவைபுரிந்தவர்கள். இவர்களில்அநேகர் வெளிநாடுகளிலே சேவைசெய்து யுத்தவிருதுகள் பெற்றவர்கள்.

—திருச்சியிலே பிராமண குலத்திலிருந்து முதன்முதலாக மனந்திரும்பிய ஸ்ரீமத் வின்செஸ்ற் மகாதேவஐயரின் பௌத்திரனும், ஸ்ரீமத் டி. எஸ். சுந்தரம்ஐயரின் குமாரனுமான யேசுசபையைச்சேர்ந்த சங். லோறன்ஸ்சுந்தரம் பிறதர்அவர்கள் சென்ற ஆடிமாதம் 29-ந்திகதி பெல்ஜியதேசத்தில் குருப்பட்டம்பெற்று ஓர்குருவாகியிருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண நகரசபை
## விளம்பரம்

இதன்பின்னுற் சொல்லப்படும் சந்தைகளிலும் காலையிலும் பெரியகடைக்குக்கிட்ட இருக்கும் பஸ் ஸ்ராண்டிலும் 1952-ம் ஆண்டு தைமாதம் 1-ந் திகதி தொடக்கம் ஒரு வருஷத்திற்குக் காசு அறவிடும் உரித்தைக் குத்தகையாகக் கொடுப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்பட்டிருக்கின்றன. 1-ம் 6-ம் குத்தகைகளுக்கு 500/- ரூபாவும் 2-ம் 3-ம் 4-ம் குத்தகைகளுக்கு 250/- ரூபாவும் மற்றச்சந்தைகளுக்கு 50/- ரூபாவும் கட்டி எடுத்த "போமில்" கேள்வி கேட்கவேண்டும். கேள்விப் பத்திரங்கள் ஒருகடதாசிக்கூட்டில் அடைக்கப்பட்டு அக்கூட்டின் மேற் பக்கத்தில் இடதுபுறமாய்ச் சந்தைக் குத்தகையின் கேள்விப்பத்திரமென்று எழுதி அதை நகரசபைக் கொமிஷனருடைய விலாசம் போட்டு 1951-ம் ஆண்டு ஐப்பசி மீ 27-ம் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிக்குமுன் நகர சபைக் கந்தோரில் ரெண்டர் பெட்டியில் போடவேண்டும். ஒவ்வொரு குத்தகைக்கும் புறம்பான போமில் கேள்விகேட்கவேண்டும். சபையால் தெரியப்பட்ட கேள்விக்காரர் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 5 நாளைக்குள் கேள்வித்தொகையில் மூன்றில் ஒன்றைக் கட்டவேண்டும். 1951-ம் ஆண்டு மார்கழிமாதம் 1-ந் திகதிக்கு முன் கேள்வித்தொகையில் மூன்றில் ஒருபங்கை முன்கட்டப்பட்ட தொகையை நீக்கி மிகுதித்தொகையை முழுமையாகவே 5-ம் 7-ம் 8-ம் 9-ம் 10-ம் சந்தைகளுக்குக்கட்டவேண்டும். மற்றச்சந்தைகளுக்குக் குத்தகைகாரர் ஒவ்வொருவரும் அத்துடன் நொத்தாரிசுச் "செலவும்" முத்திரைச் செலவும் கொடுத்து 1951-ம் ஆண்டு மார்கழிமாதம் 1-ம் திகதிக்கு முன் காணியை பொறுப்பாகக்காட்டி பிணை உறுதியும் எழுதிக்கொள்ளவேண்டும். இதன் நிமித்தமாக 1-ம் 2-ம் 3-ம் 4-ம் 6-ம் குத்தகைகளுக்குக் கேள்வி கேட்கும் "போமுக்குக்" கட்டும் காசுடன் இன்னும் ஒரு 150/- ரூபா ஒவ்வொரு குத்தகைக்கும் கட்டவேண்டும். அப்படிக்காசு கட்டத்தவறினால் போம் கொடுக்கப்படமாட்டாது.

மிகுதியான தொகையை 8 சரிபங்காய்ப் பிரித்து 8 மாதத்தில் கட்டவேண்டும். ஒவ்வொருமாதமும் 15-ந் திகதிக்குமுன் கட்டவேண்டும். இதில் முதல் கட்டு 1952-ம் ஆண்டு தைமாதம் 15-ந் திகதிக்கு முன்னும் குத்தகையைப் பற்றியவிபரங்கள் அடங்கிய நிபந்தனைகளில் சொல்லியபிரகாரம் கட்டவேண்டும். அப்படிக்காசு கட்டத்தவறினால் அல்லது சொல்லப்பட்ட திகதிக்குள் பிணைஉறுதி எழுதத் தவறினால் கட்டிய முழுத்தொகையும் பறிமுதலாய்ப் போய்விடும். குத்தகையும் திரும்ப விற்கப்படும்.

சபைக்கு எந்தக்கேள்வியையாகுதல் அல்லது எல்லாக்கேள்வியையும் விலத்திவிட அதிகாரம் உண்டு. நிபந்தனைகளின் விபரம் இந்தக்கந்தோரில் அறிந்துகொள்ளலாம். இன்னும் மேலதிகமான விபரங்களைப்பற்றி இந்தக் கந்தோரில் கேட்டறிந்துகொள்ளலாம். சந்தைக்குள் இப்பொழுது அறவிடப்படும் விகிதங்கள் குறைக்கப்படமாட்டா. சபைத்தலைவருக்குச் சந்தைக்குள் வெவ்வேறு வியாபாரத்துக்கு வெவ்வேறு இடங்கள் வகுத்துவைக்க அதிகாரமுண்டு. குத்தகைகாரரும் கீழ்க்குத்தகைகாரரும் சபைத்தலைவரின் தீர்மானத்துக்கு கட்டுப்பட வேண்டும்.

### சந்தைகள்

1. பெரியகடை (இரண்டு பிரதானமான நிரந்தரச்சந்தை வங்களாக்களும் சபையால் கட்டின பலசரக்குக் கடையும் சபையின் அனுமதியுடன் கட்டின சாலைகளும் தகரக்கொட்டில்களும்புற நீங்கலாக. அத்துடன் தகரக் கொட்டிலுக்கும் றோட்டுக்கும் இடையிலுள்ள வெளி இடமும் புறநீங்கலாக.) விற்பனவுவசதிலாகாவுக்குக் கொடுத்தஇடமும் புற நீங்கலாக (Marketing Dept.)
2. பெரியகடைக்குக் கிட்ட இருக்கும் மீன்கடையும் (பண்ணைத் துறையில் மீன்விற்கும் இடமும்.)
3. சின்னக்கடை— (இறைச்சிக் கடைகள் புறநீங்கலாக)
4. (செங்குந்தர் சந்தை இரண்டு அறைகளுடனும்) சபையின் அனுமதியுடன் கட்டின தகரக் கொட்டில் புறநீங்கலாக.
5. அரியாலைச் சந்தை (அறை புறநீங்கலாக.)
6. பெரியகடைக்குக்கிட்ட இருக்கும் காலையும் பஸ் ஸ்ராண்டும்.
7. முத்திரைச் சந்தை (ஓடு கடை புறநீங்கலாக.)
8. கொழும்புத்துறைச் சந்தை.
9. நாவாந்துறைச் சந்தை.
10. பாஷையூர்ச் சந்தை.

கா. சண்முகம்
நகரசபைக் கொம்மிஷனர்
நகரசபைக் கந்தோர்,
யாழ்ப்பாணம்,
15-9-1951-ம் ஆண்டு.

Mal. No. 506. Eng.

## "பால்தொட்டுப் பால்"

நமது முன்னோர்களிலே குற்றமேற்றி அவர்களை எவ்விதம் கண்டனஞ்செய்த போதிலும் அதற்கெல்லாம் அவர்களின் சாதுரியக்குறைவு அல்லது அனுபவ ஞானக்குறைவே உள்ளபடி காரணமாக மாட்டாது. அவர்களது அனுபவமுறைகளிலே எத்தனையோ இன்றுவரை எமக்கு நன்மைபயப்பனவாயிருக்கின்றன.

"பால்தொட்டுப் பால்கறவுங்கள்" என்பது அவர்களின் பழங்காலப் பழமொழிகளில் ஒன்றாகும். வேறுவிதமாகச் சொல்லுமிடத்து, நன்மைஅடைவதற்குமுன் பணம், சிலவேளைகளில் அதிகபணம் செலவிடப்படவேண்டியிருக்கிறது. இவ்வாறே வியாபாரத்தில், கமத்தொழிலில, மற்றும் தொழில்துறைகளில் நடக்கின்றது.

இந்தப்பழமொழி மருந்துக்கும், சமூகஅபிவிருத்தி முறைக்கும் பிரயோகிக்கப்படத்தக்கது. உதாரணமாக, நோய்களைஎதிர்த்து நடைபெறும் போராட்டமானது பெருந்தொகையான பணச்செலவை வேண்டிநிற்கின்றது. அத்துடன் அதனால் கிடைக்கும் நன்மைகள் மதிப்படைவதற்குமுன் சிலவேளைகளில் அதிககாலமும் எடுக்கின்றது. விசேஷமாய், மலேரியாவை எதிர்த்து நடைபெறுகின்ற போராட்டம் பெருந்தொகையான பணச்செலவுடன் நடக்கின்றது. கணக்கற்ற ஆரம்பநடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருக்கின்றன. தகுதியும் போதியதுமான சாக்கடைமுறைகவனமாக எடுக்கப்படவேண்டும். மலேரியாவைக் கொண்டுசென்று பரப்புகின்ற நுளம்புகள் உற்பத்தியாகின்ற எல்லாவகையான இடங்களும் ஒழிக்கப்படவேண்டும். அத்துடன் குயினைன் உதவப்படுவதாலே சனங்கள் பாதுகாக்கவும், குணமாக்கவும் படவேண்டும்.

தற்போது இல்லாதொழிந்த சர்வதேசசங்கத்தாலே நியமிக்கப்பட்ட மலேரியா நிபுணர்களின் கம்மிஷனும் மலேரியாப் பிரச்சினைமுழுவதையும் நுட்பமாகவும், அதிககாலமெடுத்தும் ஆராய்ச்சிசெய்து 1938-ம்ஆண்டு வெளியிட்ட தனது அறிக்கையிலே கொடியசுரங்களைச் குணமாக்கும் சித்திகரமான ஓர் மருந்தாகக் குயினைனைப் பாவிக்கும்படி சிபாரிசுசெய்திருக்கின்றது.

மலேரியா காலமுழுவதும் ஓர் பாதுகாப்பாகத் தினமும் 6 கிறேய்ன் குயினைன் பாவித்துவரச்செய்வது தகுதியான சிபாரிசென அவர்கள் கருதுகின்றனர். இன்னும் ஓர்கால் மலேரியா காணுமிடத்து 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன்குயினைன் கொண்டு சிகிச்சை நடத்துமாறு ஆலோசனைகூறியிருக்கின்றனர்.

மலேரியாவை எதிர்த்துப் போராடும்போது இயறகையிலே சிலசெலவு ஏற்படத்தான் வேண்டும். (என்றாலும் குயினைனின்விலை உள்ளபடியே அதிகமல்ல) ஆனால், கிடைக்கும்நன்மைகள் செலவைக்காட்டிலும் அதிமிகப்பெரியனவாகுமென்பதில் சந்தேகமில்லை.

தனது சுகபலமும் மனச்சந்தோஷமுமுள்ள சனங்கள் மற்றும்ஓர்தாம் தங்களால் ஆனதைச்செய்யக்கூடியவர்கள் ஆகும்போது ஓர் தேசமுழுவதுமே நன்மையடைகின்றது.

—"இந்தியஏயர்லைன்" கம்பெனியைச்சேர்ந்த டகோட்டாவிமானம் ஒன்று சென்ற 15-ந்திகதி பங்களூர் விமானநிலயத்தில் நொறுங்கிவிழுந்தமையால் அதன்விமானியும், உதவி விமானியும் பலத்தகாயமடைந்தனர். அதிலிருந்த 21 பிரயாணிகளும் யாதாமோர் காயமுமின்றித் தப்பிக்கொண்டார்கள். விமானத்தில் வேலைபார்த்தவர்களுக்குச் சொற்பகாயம் ஏற்பட்டது.




No. FR. 627

## TOLL RENT

### Kerative-Sangupiddy Ferry Service

Tenders will be received by the Government Agent, Northern Province, Jaffna at the Jaffna Kachcheri up to 12 noon on Monday, the 24th September, 1951 for the purchase of Toll Rent for the period 1st October, 1951 to 30th September, 1952 in respect of the Kerative-Sangupiddy Ferry on the Mahadeva Causeway.

Further particulars can be had on application to the Govt. Agent, N. P., Jaffna.

The Kachcheri, Jaffna, 11-9-1951. P. O. Fernando, Govt. Agent, N.P.

No. FR. 640

## TOLL RENT

### Karaitivu-Kayts Ferry Service

Tenders will be received by the Government Agent, Northern Province at the Jaffna Kachcheri up to 12 noon on Monday, 24th September 1951 for the purchase of the Karaitivu-Kayts Ferry Toll Rent for the period 1st October, 1951 to 30th September, 1952.

Further particulars can be had on application to the Government Agent, N. P.

The Kachcheri, Jaffna, 11-9-51. P. O. Fernando, Govt. Agent, N.P

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLA residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 20 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org